GOKULAM

கோகுலம்

ரூ.6/-

பிப்ரவரி 2004



அறிவியல் ஆக்கத்திற்கே!



- அழகிப் போட்டி!
- செம்பூதம்
- [illegible] ஸ்பெஷல்

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்



அழகிப் போட்டி! - 8

பிப்ரவரி 2004 மலர் : 22 இதழ் : 1


கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

நன்றி மறக்கலாமா?

கதை:
பூமா
படம்:
மகேஸ்




பிங்கி சோனுவுடன் சென்றது.
சோனு, நல்ல இடத்தைத்தான் காட்டியிருக்கே!
சரி, நான் வரேன்.
இந்தச் சோனுவை மிரட்டிட்டே இருக்கணும். இல்லைன்னா பயம் இல்லாமல் போயிடும்.
மறுநாள் –
மியாவ்... சோனு உன்னைப் பிடிக்கப் போறேன்.
நன்றி கெட்ட பிங்கியை எப்படி யாவது அடக்கணும்.
மறுநாள் ஒரு கடையி லிருந்து ரிமோட்டை எடுத்துக் கொண்டு வந்தது சோனு.
சிறிது நேரத்தில் பிங்கி வந்தது.
கொஞ்சம் கூட பயமின்றி எப்படி உட்கார்ந் திருக்கே சோனு? இரு உன்னை...
பிங்கி அருகில் வர சோனு ரிமோட்டை இயக்கியது.
ஐயோ நாய் சத்தம். ஓட வேண்டியதுதான்.
லொள்... லொள்...
அன்றிலிருந்து பிங்கி அந்தப் பக்கம் வரவேயில்லை.



செம்பூதம்!

தீ என்பது ஓர் இயற்கை சக்தி. மனிதன், தான் தோன்றிய காலத்திலிருந்தே, இடி விழுந்து தீப்பற்றிய மரத்திலிருந்தோ, தீ கக்கும் எரிமலையிலிருந்தோ, உராய்வால் பற்றிக்கொள்ளும் மூங்கில் காடுகளிலிருந்தோ, தீயையும், அதன் வெப்ப வெளிச்சத் தன்மையையும் அறிந்திருந்தான். குளிரைப் போக்கவும், காட்டு விலங்குகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவும், உணவு சமைக்கவும் தீயைப் பயன்படுத்தத் தெரிந்த மனிதனுக்கு, அதனைப் பாதுகாத்து வைக்கவோ, உண்டு பண்ணவோ அப்போது தெரியவில்லை. தீயை உண்டு பண்ண, அதனைத் தேடிச் சென்று கண்டு பிடித்துக் கொண்டு வந்தனர்; பின் அவர்களால் முடிந்தவரை, அதனை அணையாமல் பாதுகாத்தனர். (இல்லையெனில் திரும்பவும் தீயைத் தேடி அலைய வேண்டுமே! யாரால் முடியும் அப்போது?) இப்போது தீ நமது சட்டைப் பாக்கெட்டில் பத்திரமாய்க் குடிகொண்டு தூங்குகிறது! (தீப்பெட்டிதான்! வேண்டும்போது எழுப்பிக் கொள்ளலாம்). இப்போதும் கூட, ஆஸ்திரேலியா போன்ற பகுதிகளிலுள்ள ஆதிவாசிகள் சிலர், நெருப்பு உண்டாக்கத் தெரியாததால், ஏதேனும் ஒரு பொருளைத் தொடர்ந்து எரிய வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

பண்டைய புராணக்கதைகள் எல்லாம், தற்செயலாகவோ, மனித சக்திக்கு அப்பாற்பட்டோ, மனிதன் தீயைப் பெற்றதாகச் சொல்கின்றன. பாரசீக இலக்கியத்தில், ஒரு வீரன் வேதாளத்தோடு போராடும் போது, வீசி எறிந்த கல், குறி தவறி பாறை மீது பட்டு, தீ உண்டானதாகத் தெரிவிக்கிறது. 'தீ' சொர்க்கத்திலிருந்து வந்த 'செம்பூதம்' என கிரேக்கர்கள் நம்புகின்றனர். பழங்கால கிரீஸ் நாட்டு புராணம், அவர்களின் கடவுளான 'ஜீயஸ்' மனிதன் நெருப்பை அடையாதபடி தடுத்திருந்தாராம்: ஆனால்







'புரோமேதீயஸ்' என்ற வீரன், கடவுள்களின் மலை வீட்டிலிருந்து கொஞ்சம் நெருப்பைத் திருடிக் கொண்டு வந்து, இவ்வுலக மக்களுக்குக் கொடுத்ததாகக் கூறுகிறது. அதன் நினைவாகவே, இப்போது 'ஒலிம்பிக்' போட்டிகளின் போது, அதன் முதல் நாள், கிரீஸிலிருந்து 'எரியும் தீப்பந்தம்' போட்டி நடக்குமிடத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

தீ மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாலும், தீ மூட்டுவது அக்காலத்தில் கடினமாக இருந்ததாலும், 'தீ' தெய்வமாகப் போற்றப்பட்டது. (மனித சக்திக்கு அப்பாற்பட்டதெல்லாம் அப்போது தெய்வமாக வழிபடப்பட்டது.) தீயைக் கடவுளின் கொடையாகவும், கடவுளின் பிரதிநிதியாகவும் மக்கள் கொண்டாடினர். கிரேக்கர்கள், இப்பிரபஞ்சம் தீ, காற்று, பூமி, நீர் ஆகிய தனிமங்களால் ஆனதாகக் கருதினர். இன்று பௌத்த, சமண மதத்தினர், இவ்வுலகம் காற்று, நீர், ஆகாயம், பூமி, தீ என 'ஐம்பூதங்களால்' ஆனது என நம்புகின்றனர்.

ooo

பாரசீக இலக்கியம், ஒரு வீரன் வேதாளத்தோடு போராடும் போது, வீசி எறிந்த கல், குறி தவறி பாறை மீது பட்டு, தீ உண்டானதாகத் தெரிவிக்கிறது. 'தீ' சொர்க்கத்திலிருந்து வந்த 'செம்பூதம்' என கிரேக்கர்கள் நம்புகின்றனர்.


ooo

மோகனா

பழங்காலத்தில் இப்போது உள்ளது போல் மின்விளக்குகள் இல்லை. நீண்ட குச்சிகளின் உச்சியில் கந்தைத் துணியை வைத்து எரித்து, மஞ்சள் நிற ஒளிவிடும் தீப்பந்தம் செய்து, ஓரிடத்திலிருந்து வேறிடம் கொண்டு சென்றனர். இவற்றைச் சுவர்களில் ஊன்றி வைத்து, ஊர்களுக்கு வெளிச்சம் தந்தனர். 2000 ஆண்டுகளுக்கு முன்பு, இத்தகைய தீப்பந்தங்களே தெருவிளக்காகப் பயன்பட்டன.

மண்பாண்டம் செய்யும் முன்னரே, ஆதிகால மக்கள் சூடான கல்லின் மீது பொருட்களை வைத்து, சமைத்து உண்டனர். இப்போதும் கூட, சாலமன் தீவில் வாழும் மக்கள், தாங்கள் விரும்பும் காய்கறிகளை, ஒரு மரப் பாத்திரத்தில் போட்டு, நீர் ஊற்றி வைத்துக் கொள்வர். பின் நெருப்பின் மீது கற்களை வைத்து சூடு பண்ணி, அவற்றை நீருள்ள மரப் பாத்திரத்தில் போடுவர். பிறகு பாத்திரத்தின் மீது தழைகளைப் பரப்பி, அதன் மீது கனமான கல்லை வைக்





கின்றனர். காய்கறிகள் வெந்து போகின்றன.

நம் முன்னோர்களின் 'தீக்கருவிகள்' சிக்கிமுக்கிக் கல்லும், கந்தகக் கல்லும்தான்! இவை வேகமாகக் கடினப் பொருளுடன் மோதும் போது, தீ உண்டாகிறது. புது கற்கால மனிதர்கள் பொருட்கள் வேகமாக உரசினால், வெப்பமும், வெளிச்சமும் உண்டாவதை அறிந்தனர். எனவே வேகமாக மரத்தைக் கடைந்தோ, அறுத்தோ, தேய்த்தோ நெருப்பை உண்டாக்கினர். இதற்காக ஒரு கடினமான மரத்துண்டில் குழிசெய்து, அதில் குச்சி போன்ற நீண்ட மிருதுவான மரத் துண்டை வைத்து, வேகமாகக் கடைந்து தீ உண்டாக்கினர். இதுவே 'தீக்கடைக்கோல்' முறை எனப்பட்டது. இன்றும் இலங்கை, ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் வாழும் ஆதிவாசிகள் மற்றும் அமெரிக்க இந்தியர்களிடையே இப் பழக்கம் மிகுதியாக நிலவுகிறது.

அலெக்சாண்டிரியாவை ஆண்ட 'பாரோ மன்னர்கள்' கடலில், கப்பலில் வரும் மாலுமிகளுக்கு வழிகாட்ட, 260 அடி உயரத்தில், முதன் முதலில் கலங்கரை விளக்கத்தை அமைத்தனர். அதன் உச்சியில் உலர்ந்த மரங்களைப் போட்டு எரித்து, புகை கக்கி, கொழுந்து விட்டு எரியச் செய்தனர். இதனால் தூரத்தில் வரும் மாலுமிகள் துறைமுகம் இருக்குமிடத்தை இருட்டில் அறிவது எளிதானது. பழங்காலத்தில் ஒளிப்பிழம்பாய், மஞ்சளாய் எரியும் நெருப்பைப் பார்த்த மனிதன், விலங்குகளின் கொழுப்பும், தாவர எண்ணெயும் கூட எரியும் என்றறிந்தான். இதுதான் எண்ணெய் விளக்கிற்குத் தூண்டுகோலாய் அமைந்தது. தீ எரிய எண்ணெய் மட்டும் போதாது. அதனைக் கொஞ்சம், கொஞ்சமாய் இழுத்து எரிய, திரியும் வேண்டும் எனக் கண்டுபிடித்தனர். 1,500 ஆண்டுகளுக்கு முன், எண்ணெய் விளக்குகள் கற்களாலும், சங்குகளாலும் செய்யப்பட்டன. இன்றும் தூந்திரப் பிரதேசத்தில் சீல், வால்ரஸ், பெங்குவின்களின் கொழுப்பே விளக்கெரிக்கப் பயன்படுகிறது.



தீயை மனிதன் பல வகைகளில் பயன்படுத்தினாலும், 'லவாய்சியர்' என்ற ஃபிரெஞ்சு விஞ்ஞானி, 'ஆக்ஸிஜன்' என்ற வாயுவின் பண்புகளைக் கண்டுபிடித்தார். அதன் பின்னரே தீயின் முழுப் பெருமையும், தன்மைகளும் மக்களுக்குத் தெரிய வந்தது. தீ 'வேதி ஆற்றலின்' வெளிப்பாடு! ஒரு பொருளுடன் ஆக்ஸிஜன் இணைந்து, வேதி மாற்றமடைந்து தீயாகிறது! வெப்பமும், வெளிச்சமுமே தீயாகும்! தீயில் பொருட்கள் எரிந்து பளபளவென சிவப்பாகி, மஞ்சளாகி, வெள்ளையாகி, பின் இள நீலத்தில் ஜொலிக்கிறது!

கி.பி. 1669-ல் பாஸ்பரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. பின் தீ உருவாக்குவது எளிதாகியது. ராபர்ட் பாயில் என்ற ஆங்கிலேயர், கி.பி. 1680-ல் பாஸ்பரஸும், கந்தகமும் உராயும் போது தீ உண்டாகும் என அறிந்தார். 19-ம் நூற்றாண்டில் ஹைட்ரஜன் மூலமும் நெருப்பு உண்டாகும் எனக் கண்டறிந்தனர். 'ஜான்வாக்கர்' என்ற மருந்தாளுநர், கி.பி. 1827-ல் பேப்பரில் தடவப்பட்ட பாஸ்பரஸ் மூலம் 'முன்னோடி தீக்குச்சிகளை' உருவாக்கினார். பிறகு வெள்ளை பாஸ்பரஸ் தீங்கானது என உணரப்பட்டது. 1845-ல் சிவப்பு பாஸ்பரஸ், தீ அரங்கிற்குள் நுழைந்தது. 1855-ல் எட்வர்டு லுன்ட்ஸ்ரோம் என்ற ஸ்வீடிஷ்காரர், இப்போதைய மருந்துகள் உள்ள, மரத்துண்டுகள் உள்ள 'பெரிய சைஸ்' தீக்குச்சியைச் செய்தார். பின்னர் சிறிய தீக்குச்சிகள் வழக்கத்திற்கு வந்தன.

பேய் தெரியுமா?

ஜோக்ஸ் கார்னர்



"நாயின் கண்ணுக்குப் பேய் தெரியுமாமே! அப்படியா?"

"ஸாரி, எனக்குத் தெரியாது!"

— யமுனா ரெங்கநாதன், பெங்களூர்



"உங்களுக்குத் தெரிஞ்சு யாராவது புதையல் எடுத்திருக்கிறாங்களா, தாத்தா?"

"விடுவேனா! எனக்குத் தெரிஞ்சா நானே எடுத்திருப்பேனே!"

— மு. அகமது ஆதில், எட்டாம் வகுப்பு, தூய அருளின்பர் உயர் நிலைப் பள்ளி, பள்ளங்கோயில்



"குண்டூசி என்ன விலை?"

"மொத்தமா வாங்குனா பாக்கெட் ஏழு ரூபா."

"மொத்தமா இருந்தா அது கோணி ஊசியாச்சே!"

- தாமு, தஞ்சாவூர்.

"ஏண்டா, சைக்கிளை தள்ளிக்கிட்டுப் போறே?"

"காத்து அடிச்சாத்தான் சைக்கிள் ஓடும் பாட்டி."


"காத்து தான் ஜோரா அடிக்குதேடா."

— மு. பெரியசாமி விட்டுக்கட்டி





அழகிப்



கவலையே உருவாய் அமர்ந்திருந்தது பூசணி.

'குண்டு கல்யாணம் சைஸில் உடம்பு இருந்தால் எப்படி அழகிப் போட்டியில் கலந்து கொள்வது?' போவோர் வருவோர் அனைவரும் பூசணியின் கவலையை அதிகப்படுத்தினர். அந்தப் பக்கமாக வந்த புடலங்காயிடம் தனது மனக்குறையை வெளியிட்டது பூசணி. ''கவலையே படாதே! ஒல்லியா, நோஞ்சானா இருப்பதை விட, ஆரோக்கியமாகக் குண்டாக இருப்பதும் ஓர் அழகுதான். நீயும் போட்டியில் கலந்து கொள்'' என்று ஆறுதல் கூறியது புடலங்காய்.

மறுநாள் நீர்ச்சத்தும், சுண்ணாம்புச் சத்தும் ஒருங்கே அமையப்பெற்ற அழகான கொழு கொழு பூசணி போட்டிக்குச் சென்றது. கோயம்பேடு சந்தையின் பின்புறம் அமைந்துள்ள சமூக நலக் கூடத்தில் மாலை 5:00 மணி முதல் 6:00 மணிக்குள் அழகிப் போட்டி நடைபெற இருந்தது. விடுவார்களா காய்கறி சொந்த பந்தங்கள். அலை அலையாக வரத் துவங்கின.

முதலில் வந்தது, 'கேரட்'. ''பாருங்கோ நான் சிவப்பாயிருக்கேன். என்கிட்ட 'கெரட்டின்' அப்படின்ற நிறமி இருக்கிறதாலேதான் இப்படி இருக்கேன். என் கிட்ட 'ஏ' வைட்டமின் இருக்கு,'' படபடவென பொரிந்து விட்டு ஒயிலாக நடந்து சென்றது கேரட்.

அதன் பிறகு, 'வெண்டைக்காய் லேடி'

போட்டி!

■ என்.மாதவன் ■

உள்ளே நுழைந்து நுனி நாக்கு ஆங்கிலத்தில் பொரிந்து தள்ளியது. "English people call me lady's finger', I give phosporus. மனிதர்களோட மூளை வளர்ச்சிக்கே உதவறவ நான். மூளையிருந்தா என்னைப் பற்றி யோசிங்க'' என்று கூறிவிட்டுச் சென்றது.

'நம்மை விட மூளை அதிகமான பொண்ணு போல. வேணாம்பா, இது பேஜாராய் பூடும்' என்று சென்னை செந்தமிழில் சிந்தித்துக் கொண்டார் நடுவர் தேங்காய்.

இதற்கு அடுத்தபடியாக வந்தவர் 'வெங்காய மகாராணி'. ''பாருங்க... கோவிச்சுக்கப் படாது. நான் வரும் போதே மூக்கைச் சிந்தறீங்களே, நான் என்ன பண்றது? என்கிட்ட இருக்கிற ப்ரோப்பின் ஸல்பாரிக் அமிலம் தான் உங்களையும் சரி, அடுத்தவங்களையும் கண்ணில் கண்ணீர் வர காரணமாயிருக்கு. மற்றபடி எங்கிட்ட இரும்புச் சத்திருக்கு. மக்களுக்கு நல்ல நோய் எதிர்ப்பு சத்து கொடுக்கறவ நான். பாருங்க, பாருங்க ரொம்ப அழாதீங்க. அப்புறம் எனக்கு ரொம்பக் கஷ்டமாயிடும்'' என்று கூறிவிட்டு உருண்டோடியது.

இதற்குள் தேநீர் இடைவேளை விடப்பட வெளியே போட்டியாளர்கள் பேசிக் கொண்டனர்.

''ஏதோ நியூஸ் பேப்பர்ல போட்டாங்களேன்னு வந்தா நல்லா 'பிந்துகோஷ்' கணக்கா உட்கார்ந்திருக்கா பூசணி. இவளோட கை, காலை தனியா பிரித்துக் கூட



பார்க்க முடியாது போலிருக்கு" என்றது வெண்டைக்காய் லேடி.

"இதோ பாருங்க, எல்லோருக்கும் போட்டியில் கலந்து கொள்ள உரிமை இருக்கு. நீங்க கூடதான் வெடவெடன்னு ஒட்டடைக்குச்சி மாதிரி இருக்கீங்க. உங்களைக் குறை சொன்னா எப்படியிருக்கும்?" லேசாக டென்ஷனானது 'வெங்காய ராணி.'

"சடை உள்ளவ கொண்டை போடறா, உனக்கேன் கஷ்டமாயிருக்கு? என்னவோ உன்னையே அழகியா தேர்ந்தெடுத்த மாதிரி பேசறியே!" கேரட் கோமகள் தனது பங்குக்கு வாதிட்டாள்.

இதற்குள் தேநீர் இடைவேளை முடிய போட்டி தொடர்ந்தது.

ஸ்பெஷல் மேக்கப் எதுவுமில்லாமல் உருளைக் கிழங்கு ஊர்வசி வந்தது. "என்னை எல்லாரும் வாயுப் பதார்த்தம் அப்படி இப்படின்னு சொல்லுவாங்க. ஆனா எங்கிட்ட எக்கச்சக்கமான தாதுப் பொருள்கள் இருக்குது. எல்லாத்துக்கும் மேல உலக ஹோட்டல்களில் என்னோடதான் பூரியைச் சேர்த்து சொல்ற அளவுக்குப் பிரசித்தமானவ நான். என்னை விட வேற யாரு அழகியாக இருக்க முடியும்?" என்று சுயபுராணம் பாடியது.

"கும்புடறங்க" என்றவாறே பல்வேறு குட்டிக்கரண பல்டிகளோடு உள்ளே நுழைந்தது முருங்கைக்காய் அழகி. "எங்கிட்டே நார்ச்சத்து நிறைய இருக்கு. நரம்புகளுக்கு நல்ல வலிமையைக் கொடுக்கிற நான் மனிதர்களிடம் மலச்சிக்கல் ஏற்படாமல் காப்பாத்தறேன். ஒல்லியாக இருந்தால் தான் மனிதர்களில் அழகியாகத் தேர்ந்தெடுக்கிறாங்க" என்றபடி பூனை நடை நடந்தது முருங்கை.

உடனே புடலங்காய் முகவாயை இடித்துக் கொண்டது.

இதனிடையே தக்காளி, பச்சை மிளகாய், இஞ்சி, கொத்துமல்லி, கருவேப்பிலை போன்றவை கூட்ட நெரிசலில் அரைந்து துவையலாகிவிட அனைவரும் சேற்றினை மிதித்த மனிதர்களாய் நெளிந்து கொண்டிருந்தனர்.

பீன்ஸ், கொத்தவரைக்காய், அவரைக்காய் போன்றவை அழகிப் போட்டி நடத்துபவர்கள் மீது 'மானநஷ்ட ஈடு' மற்றும் 'மன உளைச்சல் வழக்கு' தொடுக்கப் போவதாக மிரட்டி விட்டு மறைந்தன.

இறுதியாகப் பூசணி மூச்சு வாங்க, மேடை ஏறியது. "அழகிப் போட்டிக்கு உடல் அழகு முக்கியமில்லை. நம்முடைய குணம் தான் முக்கியம். எனவே எனக்கும் இப்போட்டியில் கலந்து கொள்ள முழுத் தகுதி இருக்கிறது" என்று கூறி விட்டு இறங்கியது பூசணி.

கடின ஓடுடைய தேங்காய் நடுவருக்கே மற்ற காய்கறிகளின் மிரட்டல் பயத்தைத் தந்தது. "நடுவர் என்பதால் தீர்ப்பு கூறியே ஆக வேண்டும். நாம் அனைவருமே அழகிகள்தான். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறப்பம்சம் உள்ளது. இனி எப்போதும் இது போன்ற போட்டிகள் நடைபெறக் கூடாது என்று உத்தரவிடுகிறேன். நன்றி" என்று கூறிவிட்டு வேகமாக உருண்டோடினார் தேங்காய்.

ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்ட காய்கறிகள், தீர்ப்பைக் கேட்டு ஒற்றுமையுடன், அவியலாகக் கிளம்பின.



ஓவியப் போட்டி

வயிற்றில் பையுடன் துள்ளிச் செல்லும் ஆஸ்திரேலிய கங்காருகளைப் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு - கங்காரு. உங்கள் கற்பனைக்கேற்றவாறு கங்காருகளை வண்ணத்தில் வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. உங்கள் முகவரியை அவசியம் குறிப்பிடுங்கள். கடைசித் தேதி: 6.2.2004

விவாத மேடை

கல்வித் திட்டத்தில் மாற்றம்!

''துப்பார்க்குத் துப்பாய...'' என்று சத்தம் போட்டுப் படித்துக் கொண்டிருந்தான் விவேக்.

''விவேக், அக்கம்பக்கத்தில் இருக்கிறவங்களும் உன்னை மாதிரி பரீட்சைக்குப் படிக்கணும்னு உனக்குத் தோணுதா? இப்படி சத்தம் போட்டு பாடத்தை உருப் போடறியே!'' என்றபடி வந்து அமர்ந்தாள் ப்ரியா.

''உருப்போட்டால் என்ன தப்பு? உன்னை விட அதிகம் மார்க் வாங்கறவன். எங்கிட்ட இதெல்லாம் சொல்லாதே'' என்று கோபமாகச் சொல்லிவிட்டு மீண்டும் உருப்போட ஆரம்பித்தான் விவேக்.

''உன்னை மாதிரி ஒண்ணும் புரியாமல் மனப்பாடம் செய்றதை விட என்னை மாதிரி புரிஞ்சுபடிச்சு, உன்னை விட குறைந்த மார்க் வாங்கறதுல ஒண்ணும் தப்பில்லை. கேள்விகளை மாற்றிக் கேட்டால் நீ திணறிடுவே. எனக்கு அந்தப் பிரச்னை இல்லை.''

''புரிஞ்சு படிச்சு குறைவான மதிப்பெண் வாங்குவதை விட உருப்போட்டு படிச்சு அதிக மார்க் வாங்குறவங்களுக்குத்தான் மதிப்பு அதிகம் தெரியுமா?''

''நீ சொல்றது சரிதான். நம்ம கல்வித் திட்டமே சரியில்லை. அப்புறம் உன்னை மட்டும் குறை சொல்லி என்னாகப் போகிறது? மாணவர்கள் புரிஞ்சுக்கிட்டு சொந்த சரக்காகப் பதில் எழுதினால் நிறையப் பள்ளிகளில் ஏத்துக்கறதில்லை. புத்தகத்துல என்ன இருக்கோ அப்படியே எழுதணும்னு சொல்றாங்க.''

''நம்ம கல்வித் திட்டம் அப்படி இருந்தால் இந்த மாதிரி படித்து மார்க் வாங்குவதுதான் புத்திசாலித்தனம். கோளாறு எங்கிட்ட இல்லை; கல்வித் திட்டத்தில்



தான். அதை விட்டுட்டு...'' - விவேக்.

''படித்தேன் மறந்து போனேன்; பார்த்தேன் ஞாபகம் வந்தது; செய்தேன் உணர்ந்து கொண்டேன்'' என்பது புகழ் பெற்ற சீன பொன்மொழி. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது போல மனப்பாடக் கல்வி வாழ்க்கைக்குப் பயன் படாது. எதையும் செய்து பார்த்து, அனுபவ பூர்வமாக உணரணும்.''

''கல்வித் திட்டம் மாறும் போது நானும் மாறிக்கறேன். நீ கிளம்பு. எனக்குப் படிக்க வேண்டியது நிறைய இருக்கு'' என்றான் விவேக். ப்ரியாவும் படிக்கக் கிளம்பினாள்.

ப்ரியா, விவேக் விவாதத்தைப் பார்த்தீர்களா? இப்பொழுது நடைமுறையில் இருக்கும் கல்வித் திட்டம் சரியானதா? இல்லை கல்வித் திட்டம் மாற வேண்டுமா? உங்கள் கருத்து என்ன? 'விவாத மேடை' என்று குறிப்பிட்டு கருத்துகளை எழுதி அனுப்புங்கள். சிறந்த கருத்துகள் கோகுலத்தில் பிரசுரமாகும். சன்மானமும் உண்டு.

- தம்பிப்பயல்




அடுத்த இதழில்...

கிளித்தலை இளவரசி!

விறுவிறுப்பான
புதிய சித்திரத் தொடர்கதை
ஆரம்பம்

கதை : **குரும்பலாப்பேரி பாண்டியன்**

படம் : **லலிதா**



கொள்ளையர் கூட்டத்தைப் பிடிப்பது எப்படி?

மேப் வரைவோமா?


ஸ்நேகா




சென்ற இதழில் ரொம்ப சிம்பிளான மேப் வரைவது எப்படி என்று பார்த்தோம். ரோகிணி, வினோத் போன்றவர்கள் மேப் வரைந்து பார்த்து விட்டு, கடிதமும் எழுதியிருந்தனர்.

இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் வரைபடம் மிகவும் பழசாகத் தெரிகிறது இல்லையா? இது உங்களுக்கு அறிமுகமான வரைபடம்தான். சில திரைப்படங்களில் ஹீரோ இப்படி ஒரு பழைய மேப்பை வைத்துக் கொண்டு வில்லன்களைத் தேடிப் புறப்படுவதைப் பார்த்திருப்பீர்களே! சரி, இந்த மேப்பை நன்றாகப் பாருங்கள். உங்கள் கற்பனை சிறகடித்துப் பறந்தால், ஒரு சுவாரசியமான கதையை எழுதுங்கள். ஒரு





• சைக்கிள்



• முள்ளம்பன்றி




• பறவை



• மீன்



• ஆரஞ்சு



• மரம்

மேப் கூட அருமையான கதையைச் சொல்லி விடுவதை உணர்வீர்கள். நீங்கள் எழுதிய கதையும் இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் கதையும் ஓரளவு ஒத்துப் போகிறதா பாருங்கள்.

திமிங்கிலங்கள் வாழும் ஒரு கடல். அந்தக் கடற்கரையை ஒட்டி கிழக்குத் திசையில் நிலப்பகுதி. நிலப்பகுதியில் மரங்களும் மலைகளும் சூழப்பட்ட ஒரு காடு இருக்கிறது. இக்காட்டில் ஒரு கொள்ளையர் கூட்டம் தங்கியிருக்கிறது. இங்கிருந்து தூரத்தில் ஒரு நகரம் உள்ளது. நகரத்தின் எல்லையில் ஓர் கோட்டை. கோட்டையைத் தாண்டினால் கிராமப்புற வீடுகள். இந்நகரை ஒட்டி சற்றுத் தூரத்தில் எரிமலைகள் உள்ளன. கடல் வழியே நகரத்துக்குச் செல்லும் வியாபாரிகளைக் கொள்ளையர் கூட்டம் மறித்து பொருட்களைக் கொண்டு சென்று விடுகின்றது. இந்தக் கொள்ளையர் கூட்டத்தைப் பிடிக்கவே இந்த மேப் உருவாக்கப்பட்டிருக்கிறது. கதை எப்படி இருக்கிறது?

இந்த மேப்பைப் போல் நீங்களே புதிதாக ஒரு மேப்பை உருவாக்குங்கள். கடலில் சில மீன்களை வரையுங்கள், நகரில் ஒரு சைக்கிள், காட்டில் முள்ளம் பன்றி, யானைக் கூட்டம், பறவைகள் வரைந்து கொள்ளுங்கள். பிறகு தாளைச் சுற்றி கத்திரியால் ஓரங்களை வெட்டுங்கள். டீ தண்ணீரில் தாளை நனைத்து, காய வைத்தால் பழைய மேப்புக்கு உண்டான தோற்றம் கிடைத்து விடும். இந்த மேப்பை வைத்து நண்பர்களிடம் விளையாடுங்கள். அடுத்த மாதம் மற்றொரு சுவாரசியம் காத்திருக்கிறது.

பறவை பார்வையில் மேப்பில் உருவங்களை வரைய வேண்டும் என்று போன மாதம் சொல்லியிருந்தோம். பறவை பார்வையில் மேலும் சில உருவங்கள் மேலே...

தஞ்சாவூர் மாவட்டச் சிறப்பிதழ்

மார்ச் இதழ் தஞ்சாவூர் சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது.

அடுத்தது இராமநாதபுரம் மாவட்டச் சிறப்பிதழ்

இராமநாதபுரம் பள்ளி மாணவ, மாணவியர் தங்களின் படைப்புகளை அனுப்பி வைக்கலாம். கதைகள், ஜோக்ஸ், புதிர்கள், அனுபவங்கள் மட்டுமின்றி, உங்கள் மாவட்டத்தின் சிறப்புகள், வரலாற்று அம்சங்களையும் எழுதலாம்.

கடைசித் தேதி **15.02.2004.** பிரசுரமானால் பரிசு உண்டு.

தேசிய அறிவியல் நாள்



பிப்ரவரி 28ந் தேதி மிக முக்கிய நாளாகக் கருதப்படுகிறது. 75 ஆண்டுகளுக்கு முன் இந்த நாளில்தான் விஞ்ஞானி சி.வி. ராமன் ஒளியியல் துறையில் ஓர் அதிசய விளைவைக் கண்டு பிடித்தார். அந்த விளைவையே 'ராமன் விளைவு' என்று அழைக்கிறோம். அன்றிலிருந்து பிப்ரவரி 28ந் தேதியைத் தேசிய அறிவியல் நாளாகக் கடைபிடித்து வருகிறோம்.

சரி, அறிவியல் என்றால் என்ன? அறிவியல் என்பது ஏதோ ஓர் அதிசய நிகழ்வு அல்ல. நம் அன்றாட வாழ்வில் ஒவ்வொரு நிகழ்விலுமே அறிவியல் இருக்கிறது.

அறிவியல் நோக்கிற்குப் பல உட்கூறுகள் உள்ளன. முதலில் எதையும் கூர்ந்து அறிய வேண்டும் என்ற ஆவலை ஏற்படுத்திக் கொள்வது. அடுத்தது உற்றுநோக்குதல். அதன் பிறகு அந்த நிகழ்வைப் பற்றி கற்பனை செய்து பார்க்க வேண்டும். பிறகு பகுத்தறிய வேண்டும். சோதனைகளைச் செய்து பார்ப்பது அடுத்த கட்டம். சின்னச் சின்ன விஷயங்களையும் அக்கறையுடன் கவனிக்க வேண்டும்.



நாம் சிந்திக்கின்ற விஷயத்துக்காகப் பல்வேறு இடங்களில் தகவல்களைச் சேகரிக்க வேண்டும். தகவல்களையும் நாம் சிந்தித்த விஷயங்களையும் ஒப்புநோக்க வேண்டும். நம்முடைய செயல்பாடுகளை நிரூபிக்க வேண்டும். நிரூபித்த பின் முடிவுகளை எட்ட வேண்டும். முடிவுகளின் போது புதிதாக எழக்கூடிய பிரச்னைகளைக் கண்டறிய வேண்டும். மீண்டும் சரியாகச் செய்து பார்க்க வேண்டும்

இதுதான் அறிவியல் வழிமுறை. இந்த வழி முறையைப் பின்பற்றித்தான் நாம் அறிவியலைக் கற்கிறோம். அறிவியல் என்பது அறிவு வேட்கையையும், பகுத்தாய்வதையும், தெளிவான சிந்தனையையும், சிக்கல்களுக்குத் தீர்வு காணுவதையும் உள்ளடக்கியது என்பதே.

ஆதிமனிதனின் இந்தச் சிந்தனை போக்குதான் இன்றைய அறிவியல் வளர்ச்சிக்குக் காரணம்.

அறிவியல் மனிதனை மேலும் மேலும் வல்லமையுடையவனாக ஆக்குகிறது. அத்தகைய அறிவியலை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே அதன் வெற்றி அமைகிறது. அறிவியலால் ஆக்கப்பூர்வமான விஷயங்களை அணுகுகிறோமா, அல்லது அழிவுக்குப் பயன்படுத்துகிறோமா என்பதே முக்கியம்.

ஒவ்வொரு விஷயத்தையும் அறிவியல் வழிமுறைப்படி ஆராய்ந்து செய்தால் சி.வி. ராமன் போன்று பல விஞ்ஞானிகள் உருவாவார்கள். நாடும் உயரும்; நாமும் உயர்வோம்!

'அறிவியல் மக்களுக்காக,
அறிவியல் நாட்டிற்காக,
அறிவியல் புதிய கண்டுபிடிப்புகளுக்காக!'

என்பதை மனதில் கொண்டு செயல்படுவோம்; சிறந்த இந்தியாவை உருவாக்குவோம்!

அட்டையில்: ராஜேஸ்வரி
வண்ணப்படம்: ஸ்ரீஹரி


எது சரி, எது தவறு?

இங்கே இரண்டு செட் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எரிபொருள் அவசியத்தை உணர்த்தும் விதத்தில் இதில் எது சரி ✓, எது தவறு ✕ என்பதைக் குறிப்பிடுங்கள்.

❶



❷



விளையாட்டு நேரம்


வழி காட்டுங்கள்



ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



விடைகள்: 1. மழைத்துளி 2. காளான் டிசைன்
3.சிறுவனின் கண் 4. சிறுமியின் ஜடை
5. தவளையின் வாய்



"இன்னொரு விடை வேண்டும்!"

நினைவில் நின்றவை...

வாடா அண்ணா!

என் சித்தி மகன் அருண் நாடகங்களில் அசத்தலாக நடித்து அனைவரின் பாராட்டையும் பெறுவான். அன்றும் ஒரு நாடகம், அருண் ஆசிரியர் வேடமணிந்திருந்தான். அருணின் தங்கை அமலா மாணவர்களில் ஒருத்தியாக மேடைப் பள்ளியில் அமர்ந்திருந்தாள். கையில் பேப்பர் கட்டுடன் ஆசிரியர் அருண் சற்றே கோபமாக மேடையேறினார். .



ஃபெயில் மார்க் வாங்கியவர்களுக்கு லேசாகப் பிரம்பால் அடிப்பது போன்ற காட்சி, அப்படியே அடித்தான் சிலரை. அமலாவை மட்டும் கொஞ்சம் ஓங்கியே அடித்து விட்டான். அமலா மேடை என்பதை மறந்து "வாடா அண்ணா வீட்டுக்கு, நான் அம்மாகிட்டே சொல்லி உனக்கு அடி வாங்கித்தர்றேன்" என்று தன் சொந்த டயலாக்கை எடுத்துவிட, அருண் மேடையில் திகைத்து நின்று விட்டான். பிறகு எப்படியோ சமாளித்து நடித்து முடித்தார்கள் காட்சியை.

— டேனியல் லியோ பிரபு,
மேலப் பொன்னகரம், மதுரை

சண்டை!

நானும், தம்பி பாரத்தும் சிறுவயதில் சண்டை போட்டுக் கொள்வோம். அப்படித்தான் ஒருநாள் அவன் பள்ளியில் ஆண்டு விழா நடைபெற இருந்த அன்று காலை, சண்டைப் போடப் போய் அவன் கீழே விழுந்து தலையின் முன் பக்கத்தில் காயம். தையல் போட்டு தலையில் கட்டுக் கட்டியபடியே போய் பரிசு வாங்கினான். அப்போது எடுத்த போட்டோவை இப்போது பார்த்தாலும் அந்தச் சம்பவம் நினைவுக்கு வந்துவிடும். அன்றிலிருந்து சண்டைக்கே நான் போவதில்லை. இது எங்கள் இருவர் வாழ்விலும் நடந்த மறக்க முடியாத சம்பவம்.

— பி. வரதராஜன்,
அம்மையப்பன்

திக்...திக்...பக்...பக்...

எனக்குத் தலைமையாசிரியரிடம் இருந்து அழைப்பு வந்தது. அவர் மிகவும் கண்டிப்பானவர். என்னவாக இருக்கும் என்று மனது திக்...திக்...பக்...பக்... பயத்தால் பதற்றம். அவருடைய அறையை அடைந்தேன். என்னைக் கண்ட அவர், சில நிமிடம் காத்திருக்கச் சொல்லி, 'இண்டர்காமில்' பேசினார். பயத்தால் நான் மேலும் பதற்றம் அடைந்தேன். சிறிது நேரத்தில் ஓர் ஆசிரியை அங்கு வந்தார். ''ஏய்! நிர்மலா, நான் சொல்லலை! நீ சிறு வயதில் உன்னை மாதிரியே உள்ள பெண், திவ்யா, இவள் தான்". "ஆமாம், மேடம்! என் சிறு வயது தோற்ற ஜெராக்ஸ் காபி." அதற்கு மேடம், "நிர்மலா, அதுமட்டுமல்ல, உன்னைப் போலவே திவ்யாவும் முதல்



ரேங்க் மாணவி" என்று சொல்லி அவரும் அந்த ஆசிரியையும் என்னைப் பாராட்டினர். பிறகு "என்றும் முதல் மாணவியாக வந்து இதே பள்ளிக்கு, ஆசிரியையாக வர வாழ்த்துகள்" என்று கூறினர். மிக்க மகிழ்ச்சியுடன் வகுப்பறையை அடைந்தேன்.

– சி. திவ்யா,
பி.கே.ஜி.ஜி.மேல்நிலைப்பள்ளி,
சென்னை

பார்த்த ஞாபகம் இல்லையோ..!

நான் பள்ளியில் படிக்கும் போது எங்களது ஆசிரியர் ஒருவர் பாடமெடுக்க வருவார். அவர் மிகுந்த ஞாபக மறதிக்காரர். பல விஷயங்களை மறந்து விடுவார். ஆனால் பாட விஷயத்தில் கெட்டிக்காரர். ஒருமுறை அவரது



அறைக்கு வெளியே நின்று கொண்டிருந்த மாணவனை அழைத்து, "தம்பி, நீ போய் பத்மநாபனை வரச் சொல்" என்றார். அந்த மாணவனுக்கு ஒரே திகைப்பு. "சார்..." என்றபடியே அவன் அங்கேயே நின்றிருந்தான். "என்னப்பா... என்ன விஷயம்?" என அவர் கேட்க... "சார்... நான்தான் பத்மநாபன்" எனச் சொல்ல, அவருக்கு ஒரு மாதிரியாகி.... "சாரிப்பா... எனக்கு மறந்து போச்சு" என்று சொன்னார்.

- பாளை பசும்பொன்

என்ன காலம்?

எங்கள் தமிழாசிரியர் நகைச்சுவை குணம் உடையவர்.



ஒரு நாள் நிகழ்காலம், எதிர்காலம், இறந்த காலம் பற்றி நடத்திக் கொண்டிருந்தார். ஒரு மாணவன் பாட வேளையின் போது தூங்கிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது ஆசிரியர் அவனைக் கூப்பிட்டு, "ராமன் வெந்நீரில் குளித்தான். அது என்ன காலம்?" என்று கேட்டார்.

உடனே அவன் "குளிர்காலம்" என்றான். உடனே ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்து விட்டோம்.

- ச. அருண் சித்தார்த்,
எட்டாம் வகுப்பு, ஜவஹர் பள்ளி,
நெய்வேலி

வடை

விருந்தினர்களுக்காக வடை செய்து கொண்டிருந்தார் பாட்டி. அங்கு வந்த நவீன் "பாட்டி, எனக்கு வடை தாங்க" என்றான். உடனே அவனுக்கு ஒரு வடையைக் கொடுத்த பாட்டி, "வடையைத் தின்று விட்டு எண்ணெய் கையில் ஒட்டியிருந்தால் காலில் தடவிக் கொள்ள வேண்டும்" என்று விபரமும் கூறினார்.

சிறிது நேரம் கழித்து அந்த வடையைத் தின்றுவிட்ட நவீன் மீண்டும் தன் பாட்டியிடம் சென்றான். "பாட்டி, ஒரு காலில் எண்ணெய் தேய்ச்சுட்டேன், இன்னொரு காலுக்கு எண்ணெய் இல்லை. அதுக்கு இன்னொரு வடை தாங்க" என்று கேட்கவும், அங்கிருந்த அனைவரும் அவனது சாதுர்யமான பேச்சைக் கேட்டு சிரித்தனர்.

- எம்.கலைச்செல்வி,
இராஜபாளையம்





அமலாபுரி இளவரசனும்

அமலாபுரியை ஆண்டு வந்த அரசன் விஜயவர்மனுக்கு ஒரே மகன். இளவரசன் ராஜவர்மன் வில் வித்தையில் நன்கு தேர்ச்சிப் பெற்றிருந்தான். குணத்திலும், பண்பிலும் சிறந்து விளங்கினான். அரசனுக்கு மட்டுமின்றி, நாட்டு மக்களுக்கும் இளவரசனை மிகவும் பிடித்திருந்தது.

ஒரு நாள் மன்னரின் சபைக்கு மூன்று அதிசய மனிதர்கள் விஜயம் செய்தனர். மூவருக்கும் ஒவ்வொரு தனித் திறமை இருந்தது. ஒருத்தரின் கால்கள் இரண்டும் ரொம்ப நீளமாக இருந்தன. அவர் எந்த இடத்துக்கும் காற்றைவிட வேகமாகச் சென்று வரக் கூடியவர். இரண்டாமவர் ஞான திருஷ்டியால் அனைத்தையும் அறியும் திறமை உடையவர். மூன்றாமவர் வில் வித்தையில் விஜயனைப் போல குறி தவறாது அம்பு எய்பவர். இந்த மூவரின் தனித் திறமைகளைக் கண்டு இளவரசர் வியந்து போனார். மூன்று பேருடனும் தானும் அவர்கள் செல்லும் இடங்களுக்குச் சென்று வர அரசரிடம் அனுமதி கேட்டார் இளவரசர். அரசரும் மறுப்பேதும் கூறாமல் இளவரசரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் அவர்களுடன் அனுப்பி வைத்தார்.



அரண்மனையை விட்டு நால்வரும் கிளம்பினர். சென்று கொண்டிருக்கும் வழியில் ஓர் ஆற்றைக் கடக்க வேண்டி இருந்தது. அப்போது அந்த ஆற்றில் ஓர் எலி தவறி விழுந்து விட்டது. நீரிலிருந்து வெளியே வர தவித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்து இரக்கம் கொண்ட இளவரசன் உடனே தன்னுடைய அம்பை வைத்து எலியைத் தண்ணீரிலிருந்து வெளியே வரச் செய்து காப்பாற்றினான். ''என்னுடைய உயிரைக் காப்பாற்றிய இளவரசே, நீங்கள் நீடுழி வாழ்க! நான் எலிகளுக்கு அரசன். உங்களுக்கு எங்கள் இனத்தால் ஏதேனும் உதவி தேவைப்பட்டால் தயங்காமல் கேளுங்கள்'' என்றது. ''சரி! அப்படி ஏதேனும் உதவி வேண்டியிருந்தால் கண்டிப்பாகச் சொல்கிறேன்'' என்றான் இளவரசன்.

அதிசய மனிதர்களும்

■ ஆர்.சாரதா ■

மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தனர். வழியில் எறும்புகள் வரிசையாகச் சென்று கொண்டிருந்தன. ஆற்றில் ஓடிக் கொண்டிருந்த தண்ணீரில் சில எறும்புகள் விழுந்தன. தண்ணீரில் எறும்புகள் தத்தளித்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்ற இளவரசன்



உடனே பெரிய இலைகள் இரண்டை பறித்து நீரில் போட்டான். தண்ணீரில் விழுந்த இலைகளைப் பற்றி எறும்புகள் கரைக்கு வந்து சேர்ந்தன. இங்கும் தங்களைக் காப்பாற்றிய இளவரசனுக்கு எறும்புகள் நன்றி கூறின.

''இளவரசே, நீங்கள் செய்த இந்த உதவியை நாங்கள் என்றென்றும் மறக்க மாட்டோம். உங்களுக்கு நாங்கள் செய்யக் கூடிய உதவி ஏதேனும் இருந்தால் வேண்டும்போது தயங்காமல் கேளுங்கள். செய்யக் காத்திருக்கிறோம்'' என்றது எறும்புகளின் தலைவன். ''சரி'' என்று மகிழ்ச்சியோடு கூறிவிட்டு இளவரசன், மற்ற மூவருடன் பயணத்தைத் தொடர்ந்தான்.

மறுநாள் காலை. சந்திரபுரி என்ற நாட்டை அடைந்தனர் அவர்கள். அந்த நாட்டு அரசன் மிகவும் கொடுங்கோலன். அவனுக்கு யுவராணி என்ற அழகிய மகள் இருந்தாள். இளவரசிக்கு மணம் முடிக்க எண்ணிய அரசன், மூன்று கட்டளைகள் இட்டிருந்தான், இளவரசியை மணக்க விரும்பும் இளவரசர்களுக்கு, கட்டளையை நிறைவேற்ற முடியாமல் போனால் அவர்களுக்குச் சிறை தண்டனை. அரசனின் கட்டளையை நிறைவேற்ற முடியாமல் சிறையில் அடைபட்டிருந்தார்கள் 99 இளவரசர்கள்.

ஊர் மக்கள் சொன்ன இந்தத் தகவலைக்

கேட்டு அதிர்ச்சியடைந்தான் இளவரசன். அரசனின் கட்டளையை நிறைவேற்றி இளவரசியை மணந்து கொள்வதோடு, சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் 99 இளவரசர்களையும் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். உடனே அரண்மனையை நோக்கி நடந்தனர்.

நால்வரும் அரசரிடம் சென்றனர். இளவரசன் ராஜவர்மன் அவனது விருப்பத்தை அரசரிடம் தெரிவித்தான்.

அரசரும் சம்மதித்துவிட்டு தன் முதல் உத்தரவை பிறப்பித்தார். "இளவரசே! இமயமலையில் ஓர் இடத்தில் குளத்தில் பெரிய சிகப்பு தாமரைகள் மலர்ந்திருக்கும். நாளை காலைக்குள் அதைக் கொண்டு வர வேண்டும். ஒருவராலும் இதுவரை முடிய வில்லை. உன்னால் முடிகிறதா, பார்ப்போம்" என்றார் அரசர்.


அரசரின் அலட்சியமான பேச்சைக் கேட்டு வீறு கொண்டு எழுந்தான் இள வரசன். இளவரசனுடன் கூட வந்த மூன்று நண்பர்களில் இரண்டாமவர் ஞான திருஷ்டி யால் பூக்கள் பூத்திருக்கும் இடத்தைச் சொல்ல, முதலாமவர் தனது நீண்ட கால்களால் காற்றிலும் விரைந்து சென்று அரசர் சொன்ன பூக்களுடன் திரும்பி வந்து, இளவரசனிடம் கொடுத்தார்.

மறு நாள் காலை, மலர்ந்த பூக்களைக் கொண்டு வந்து கொடுத்த இளவரசனைக் கண்டதும் வியப்பும் அதிர்ச்சியும் அடைந்தார் சந்திரபுரி அரசர். அடுத்த கட்டளையைப் பிறப்பித்தார். "ஒரு மூட்டை எள், ஒரு மூட்டை மணலையும் கலந்து வைத்து விட்டு, எனக்கு எள்ளை மட்டும் தனியாகப் பிரித்துக் கொடுங்கள்" என்றார் மன்னர். "இளவரசே! நமக்கு உதவி செய்வதாகச் சொன்ன எறும்புக் கூட்டத்தை அழைத்து விஷயத்தைக் கூறி உதவி செய்யச் சொல்லுங்கள்" என்றனர் நண்பர்கள்.

இளவரசரும் "அப்படியே செய்கிறேன் என்று சொல்லி எறும்புகளின் தலைவனிடம் அரசனின் ஆணையைக் கூற எறும்புகள் சுறுசுறுப்பாக உடனே செயல்பட்டன. மறுநாள் காலை, ஒரு மூட்டை எள் மட்டும் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டதை எடுத்துக் கொண்டு அரசரின் முன் வைத்தான் இளவரசன். அரசருக்கு மீண்டும் வியப்போ வியப்பு.

"சரி. இதோ என்னுடைய மூன்றாவது உத்தரவு. அரண்மனையில் நூறு அடி உயர மரத் தூண் ஒன்று உள்ளது. நாளை காலைக்குள் அந்தத் தூணை உடைத்து, மரத்தைப் பொடியாக்கி விட முடியுமா? சிறையில் ஏற்கெனவே இருக்கும் 99 பேருடன் சேர்ந்து நீயும் நூறாவது ஆளாக ஆகிவிடுவாய்" என்றார் அரசர். "சரி! பார்க்கலாம்" என்று உற்சாகமாகக் கட்டளையை ஏற்றுக் கொண்டு, இப்போது எலிகளின் துணையைத் தேடினான் இளவரசன். எலிகள் தங்கள் கூரிய பற்களால் மரத்தைப் பொடி பொடியாக்கிவிட்டன.


மறு நாள் காலை, மன்னர் வந்து பார்த்தார். மரத்தூண் இருந்த இடத்தில் மரத் தூள்கள். இளவரசனைப் பாராட்டி விட்டு, தன் மகளை இளவரசனுக்குத் திருமணம் செய்து கொடுக்கச் சம்மதித்தார். நண்பர்களுடன் தன் நாட்டுக்குத் திரும்பிய இளவரசன் நடந்த விஷயங்களைத் தன் பெற்றோர்களிடம் கூறினான். இளவரசன் ராஜவர்மனுக்கும் இளவரசி யுவராணிக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. உதவி செய்த மூன்று நண்பர்களும் அரண்மனையிலேயே தங்க வைக்கப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்ட 99 இளவரசர்களும் விடுவிக்கப்பட்டனர். அமலாபுரி மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.



உலகின் மிகப் பெரிய நூலகம், அமெரிக்காவில், வாஷிங்டனில் உள்ள லைப்ரரி ஆஃப் காங்கிரஸ்.

பாலை நிரப்புவது எப்படி?

புதிர் உலகம்



I (அ). உங்களிடம் ஒரு லிட்டர் பாத்திரம் ஒன்றும், அரை லிட்டர் பாத்திரம் ஒன்றும் கொடுக்கப்படுகின்றது. வேறொரு பாத்திரத்தில் ஒரு லிட்டர் அளவுள்ள பாலும் கொடுக்கப்படுகிறது. இந்த ஒரு லிட்டர் பாலை, அந்த ஒரு லிட்டர், அரை லிட்டர் ஆகிய இரண்டு பாத்திரங்கள் முழுவதும் நிரப்ப வேண்டும். தண்ணீர் எதையும் கலக்கக் கூடாது. முடியுமா?

(ஆ). மந்திரி ஒருவர் ராஜாவையும், மகாராணியையும் தன் வீட்டு விருந்திற்கு அழைத்திருந்தார்.

அவர் வீட்டில் மூன்றே மூன்று தங்கத் தட்டுகள்தான் இருந்தன.

மந்திரி, தனக்கும் ராஜாவுக்கும் ராணிக்கும் மூன்று தட்டுகளில் விருந்து பரிமாறினார். அங்கே அவரது தங்கையும் இருக்க வேண்டி வந்தது.

இருந்தும் எந்தச் சிக்கலுமின்றி அனைவரும் சாப்பிட்டு முடித்தனர்.

அப்படியெனில் மந்திரி, ராஜா, ராணி, மந்திரியின் தங்கை நால்வரும் எப்படி மூன்று தட்டுகளில் சாப்பிட்டிருப்பார்கள்?

- என். ஜரினாபானு,
திருப்பட்டினம்.

II ஒருவருடைய வயதை 6 ஆல் வகுத்தால் மீதி 5ம், 5 ஆல் வகுத்தால் மீதி 4ம், 4ஆல் வகுத்தால் மீதி 3ம், 3ஆல் வகுத்தால் மீதி 2ம், 2ஆல் வகுத்தால் மீதி 1ம் வரும் என்றார். அப்படியானால் அவருடைய வயதென்ன? (அவரது வயது 60க்குள்தான்.)

- ம. இதயகுமார்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
நல்லூர்.

III (அ). கிட்டுவின் பையில் மொத்தம் ரூ.1.15 பைசா இருந்தது. அவனது தங்கை ஒரு ரூபாயைக் கொடுத்து கிட்டுவிடம் சில்லறைக் கேட்டாள். கிட்டுவும் முயற்சித்தான். அவனிடமிருந்த சில்லறையைக் கொண்டு ஒரு ரூபாய் சில்லறை எடுக்க முடியவில்லை. அப்படியென்றால் கிட்டுவிடம் இருந்த நாணயங்கள் எவை?

(ஆ) ரங்கன் தன் வீட்டிலிருந்து, பிள்ளையார் கோவிலுக்குச் சென்று, திரும்பி

வர ஒரு மணி நேரமாகும். அதேபோன்று சைக்கிளில் சென்றுவிட்டு, வரும்பொழுது நடந்து வந்தால் அவனுக்கு நாற்பது நிமிடங்களாகும். அப்படியென்றால், ரங்கன் சைக்கிளிலேயே சென்று திரும்பி வருவதற்கு எத்தனை நிமிடங்களாகும்?

- ஏ.ஜி. முகம்மது நௌபீக்,
மேலப்பாளையம்.

IV ஏழு மாம்பழங்களைப் பன்னிரண்டு பேருக்குச் சமமாகப் பங்கிட வேண்டும். ஒரு மாம்பழத்தை அதிகமாக நான்கு துண்டுகள் வெட்டலாம். அதற்கு மேல் வெட்டக் கூடாது. எப்படி பங்கிடுவது?

— ச. அபிநயா,
ஆறாம் வகுப்பு,
ஜவஹர் மேல்நிலைப் பள்ளி,
நெய்வேலி-1.

V கேள்விகளுக்கான பதில்கள் மை என்ற எழுத்தில் ஆரம்பிக்கும்.

1. பறவைகளில் ஒன்று ________
2. சீதையின் மற்றொரு பெயர் ________
3. இந்தியாவிலேயே நவராத்திரி விழாவை மிகச் சிறப்பாக, தேசிய திருவிழா போலக் கொண்டாடப்படும் இடம் ________
4. முன்னாள் உலகக் குத்துச்சண்டை சாம்பியன் ________
5. காந்த ஆற்றலின் மூலமாக மின்னாற்றலைத் தூண்டிப் பெறலாம் என்ற மின்காந்த தத்துவத்தைக் கண்டுபிடித்தவர் ________
6. காசநோய் உண்டாகக் காரணமாகும் கிருமியின் பெயர் ________

- சத்தியபாமா,
ஒன்பதாம் வகுப்பு,
உமா மகளிர் உயர்நிலைப் பள்ளி,
திருச்சிற்றம்பலம்.

விடைகள்



I (அ). முதலில், காலியாக உள்ள ஒரு லிட்டர் பாத்திரத்தினுள் காலியாக உள்ள அரை லிட்டர் பாத்திரத்தை வைத்து விடுங்கள். இப்போது ஒரு லிட்டர் பாலை ஊற்றினால் இரண்டு பாத்திரங்களும் நிரம்பி விடும்.

(ஆ). மந்திரியின் தங்கைதான் அந்நாட்டு அரசி.

II அவருடைய வயது 59

III (அ) ஒரு ஐம்பது பைசா, ஒரு இருபத்தைந்து பைசா, நான்கு பத்து பைசாக்கள்.

(ஆ) ரங்கன் சைக்கிளிலேயே சென்று திரும்ப வர இருபது நிமிடங்கள் ஆகும்.

IV நான்கு மாம்பழங்களை மூன்று துண்டுகளாக வெட்டினால் பன்னிரண்டு துண்டுகள் ஆகும். ஆளுக்கொன்று தர வேண்டும். மீதியுள்ள மூன்று மாம்பழம் ஒவ்வொன்றையும் நான்கு துண்டுகளாக வெட்டிப் பன்னிரண்டு துண்டுகளை ஆளுக்கொன்று தர வேண்டும்.

V 1. மைனா
2. மைதிலி
3. மைசூர்
4. மைக் டைசன்
5. மைக்கேல் ஃபாரடே
6. மைக்ரோ பாக்டீரியா

கதைநேர் ஸ்பெஷல்

யாருக்குப் புத்தி சொல்லலாம்?

காடு எங்கும் சோவென மழை பெய்து கொண்டிருந்தது. காற்று பலமாக வீசியது. பறவை, விலங்கினங்கள் தங்கள் இருப்பிடத்தில் ஒதுங்கி இருந்தன.

அங்கிருந்த மரம் ஒன்றில் குருவி வாழ்ந்து வந்தது. குருவி கூட்டிலே ஒடுங்கி யிருந்து, மழையின் சுகத்தை அனுபவித்தது. அதே பகுதியில் வசிக்கும் குரங்கு வந்தது. மழைக்காக ஒண்டி நின்றது.

அக்குரங்கைக் குருவி பார்த்தது. அதன் மேல் இரக்கம் ஏற்பட்டது.

''குரங்கே, வருவது மழைக் காலம். பறவைகளும் விலங்குகளும் இருப்பிடம் தேடி விட்டன. நீ எப்போதும் நாடோடியாக அலைகிறாய். உனக்காவது இரண்டு கை, இரண்டு கால் உண்டு. வீடு கட்டி வாழலாமே. எனக்குக் கையில்லை, நான் வாயாலேயே கூடு அமைத்துள்ளேன். அதைப் போல் இனி ஓர் இடம் தேடு. மழையில், வெயிலில், குளிரில், பனியில் துன்புற வேண்டியது இல்லை அல்லவா?'' என்றது குருவி.

குருவி அறிவுரை குரங்குக்குப் பிடிக்க வில்லை. ''உனக்கு வீடு உள்ளது. வீடு இருக்கின்ற திமிரைக் அடக்கறேன்'' என்று கூட்டைப் பிய்த்து எறிந்தது.

பின் குரூரமாகச் சிரித்து கொண்டே அவ்விடம் விட்டு அகன்றது. சொல்லத் தகாதவர்களுக்குப் புத்திமதியைச் சொல்லக் கூடாது. கேட்காதவர்களிடம் நாமே வலிய சென்று புத்தி சொல்லக் கூடாது என்பதைக் குருவி புரிந்து கொண்டது.

- செ. பிரியா,
எட்டாம் வகுப்பு,
க.ஊ.ஒ.ந.நி.பள்ளி,
வீரியபட்டி.





செ. சதீஸ்குமார், எட்டாம் வகுப்பு,
க.ஊ.ஒ.ந.நி.பள்ளி, வீரியப்பட்டி

விடுகதைகள்

அ) என்னில் ஆயிரம் ஓட்டை உண்டு
ஆனாலும் ஆறு, கடலில் போட்டால்
அள்ளிக் கொண்டு வருவேன் - நான் யார்?

ஆ) திடப் பொருளைப் பிடித்து வைத்துக் கொள்பவன்; திரவம் விஷயத்தில் மட்டும் கோட்டை விட்டு விடுவான் - அவன் யார்?

இ) அழிக்கும் பணி கொண்ட இவனுக்குப் பள்ளிப் படிப்பில் தனியிடம் உண்டு - அவன் யார்?

- ச. அம்மையப்பன்,
ஆறாம் வகுப்பு, க.ஊ.ஒ.நடுநிலைப் பள்ளி,
வீரியபட்டி



நெருப்புக்கோழி

* இறக்கை இருந்தும் பறக்க முடியாத பறவை இது.
* இதனால் பறக்க முடியாதே தவிர மணிக்கு 40கி.மீ. வேகத்தில் ஓட முடியும்.
* உலகிலேயே மிகப் பெரிய பறவை நெருப்புக் கோழிதான். இதன் உயரம் சுமார் 8 அடி. எடை சுமார் 135 கிலோ.
* 5 அல்லது 6 கோடி ஆண்டுகளாக உலகில் வாழும் உயிரினம் இது.
* மத்திய ஆப்பிரிக்காவில் தான் நெருப்புக் கோழிகள் நிறைய உள்ளன.
* நெருப்புக்கோழிகள் சரியான தீனி விரும்பிகள். புல், பூண்டு, செடி, கொடி, புழு, பூச்சி, எலி, பல்லி, ஓணான் ஆகியவை ஆகாரம். சின்னச் சின்ன கூழாங்கற்களை விழுங்கி வைக்கும். பல் கிடையாது. வயிற்றில் போகும் கற்கள், இரையை அரைத்துக் கொடுக்கும்.

- ஜி. பிரணவ், கரூர்

எல்லைகள்

கரூரின் வடக்கில் நாமக்கல் மாவட்டமும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் முசிறி தாலுகாவும், கிழக்கில் திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களும், தெற்கில் சிவகங்கை, மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களும், மேற்கில் திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களும் எல்லைகளாக அமைந்துள்ளன.

தமிழ், கன்னடம், மலையாளம், உருது மற்றும் தெலுங்கு மொழி பேசுகின்றனர்.

தொழிற்சாலைகள்

இ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலைகளும், தமிழ்நாடு காகித ஆலைகளும், கூட்டுறவு நூற்பாலை, செட்டிநாடு சிமெண்ட் ஆலை, தமிழ்நாடு ஆஸ்பெஸ்ட்டாஸ் ஆலை ஆகியவை உள்ளன. மேலும் இந்த மாவட்டத்தில் 2 தொழிற் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன.

— வி. மீனாட்சி,
ஆறாம் வகுப்பு, காமராஜர்
மெட்ரிகுலேசன்பள்ளி, கோவை.



கிறிஸ்துமஸ் தாத்தா பை நிறைய சாக்லெட்களுடன் கிளம்பினார். அந்த சாக்லெட்களில் கால் பாகத்தை மேரிக்கும், மீதியிருந்ததில் மூன்றில் ஒரு பங்கை ராபர்ட்டுக்கும், அதன் பின் மீதியிருந்ததில் ஐந்தில் ஒரு பங்கை கீதாவுக்கும் வழங்கினார். அதன் பின்னர் அவரிடம் பதினாறு சாக்லெட்கள் இருந்தன. அப்படியானால் கிறிஸ்துமஸ் தாத்தா முதலில் கொண்டு வந்த சாக்லெட்கள் எவ்வளவு?

- ஆர். பிரசன்னா, கரூர்

விடை: 40 சாக்லெட்கள்



கரூர் ஸ்பெஷல்

வரலாறு

கரூர் மாவட்டம், திருச்சி மாவட்டத்திலிருந்து 1995ஆம் ஆண்டில் இருந்து பிரிந்து இயங்குகிறது. கரூர் மாவட்டத்தின் தலைமையிடம் கரூர். இது அமராவதி நதிக்கரையில் அமைந்துள்ளது. கரூர், புராண வரலாற்றுப் பெருமைகள் கொண்டது.

கரூருக்கு வஞ்சி, ஆதிமாபுரம், ஆதிபுரி வஞ்சிவனம், கர்ப்பபுரி, கரபுரி கோபி தாரவனம், பசுபதீஸ்வரம், பாஸ்கரபுரம், சண்மங்கலபுரம் எனப் பல்வேறு பெயர்கள் தல புராணத்தில் கூறப்பட்டுள்ளன.

கரூர் பசுபதீஸ்வரர் கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் முடி வழங்கு சோழபுரம் என்று இவ்வூர் குறிப்பிடப் பெற்றுள்ளது.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் கரூரை ஆண்டுள்ளனர். சேர, சோழ மன்னர்களின் தலைநகராகவும் கரூர் விளங்கியுள்ளது. சோழ மன்னர்கள் முடி சூட்டிக் கொள்ளும் ஐந்து ஊர்களில் ஒன்று கரூர்.

- ஆர். ராஜலட்சுமி,
கரூர்

பஞ்சலிங்கத்தலம்

கரூர் தலத்திற்குத் தமிழ் நாட்டில் வேறெந்தத் தலத்திற்கும் இல்லாத மகிமையுண்டு. பசுபதிலிங்கம், வஞ்சுளேசுரலிங்கம், சோமச்சுரலிங்கம், கைலாய நாத லிங்கம், சுரியமாலீசர் லிங்கம் ஆகிய ஐந்து லிங்கங்கள் இத்தலத்தில் காணப்படுகின்றன. எனவே இத்தலம் பஞ்சலிங்கத்தலம் எனப்படுகிறது.

- நெ. இராமன்,
சென்னை

மியாவ்... மியாவ்...

எங்கள் வீட்டுப் பூனை
இருட்டில் உருட்டும் பூனை
அங்கும் இங்கும் தேடும்
ஆளைக் கண்டால் ஓடும்
தாவி எலியைப் பிடிக்கும்
தயிரை ஏறிக் குடிக்கும்
நாவால் முகத்தைத் துடைக்கும்
நாற்காலியின் கீழ்ப் படுக்கும்.

- ஆர். நந்தகுமார்,
ஐந்தாம் வகுப்பு,
க.ஊ.ஒ.ந.நிலைப்பள்ளி,
வீரியபட்டி



கரூர் ஸ்பெஷல்



"தளபதியாரே, மகத நாட்டு மன்னன் நம் மீது போர் தொடுக்கப் போவதாக ஓலை அனுப்பியிருந்தானே, ஏற்பாடுகள் எல்லாம் செய்து விட்டீரா?"

"நீங்கள் தப்பி ஓடுவதற்குச் சுரங்கமெல்லாம் தயார் மன்னா!"


- குட்டி பிரசன்னா, கரூர்

மருந்தும் விருந்தும்

பச்சை நிறத்துல
பாவக்கா - அது
பசிக்கும் வயித்துக்கு
தேவைக்கா...
நச்சை அழிக்கும்
மருந்தக்கா - அதை
நன்றாய் சமைத்தால்
விருந்தக்கா
துச்சம் தருகிற
குடல் புழுவைத்
துடிக்க வைத்தே
கொன்றிடுமாம்
ரத்த சோகையைப்
போக்கிடுமாம்
வயிற்றுப் புண்ணையும்
நீக்கிடுமாம்
பாவக்கா மருந்தக்கா - அதை
அறியா விட்டால் வருந்தக்கா.

- ச. அம்மையப்பன்
ஆறாம் வகுப்பு,
க.ஊ.ஒ.ந.நி.பள்ளி.
வீரியபட்டி

எல்லாவற்றையும் நேசி!





இயற்கையை நேசி,
இருதயம் சுத்தமாகும்.
உன்னை நேசி,
உண்மைகள் புரியும்.

வாழ்கையை நேசி,
வானம் தெரியும்.
நிலவை நேசி,
நினைவுகள் இனிக்கும்.
கதிரவனை நேசி,
விடியல் கிடைக்கும்
நாவை நேசி,
நல்ல வார்த்தைகள் பிறக்கும்.

உழைப்பை நேசி,
உயர்வு நிச்சயம்.
நாட்டை நேசி,
நாளைய நாட்கள் உனக்கே!

- நா. மகிந்தா
எட்டாம் வகுப்பு, க.பரமத்தி






உன்னால் முடியும்!

ராஜாளி பறவை ஓர் உயரமான மரத்தின் மீது முட்டை இட்டது. அந்த மரத்தில் வாழ்ந்த குரங்கு ஒன்று அந்த முட்டையை எடுத்து கோழி முட்டையுடன் வைத்து விட்டது. கோழி தன் முட்டையுடன் ராஜாளி முட்டையும் சேர்த்து அடைகாத்தது.

முட்டையிலிருந்து கோழி குஞ்சு வெளியே வர ஆரம்பித்தது. ராஜாளி முட்டையிலிருந்து வெளியே வந்தது. கோழிக் குஞ்சுகள் வளர்ந்து கோழியாகவும், சேவலாகவும் வளர்ந்தன. ராஜாளியும் வளர்ந்தது. கோழிகளைப் போலவே ராஜாளியும் குப்பையைக் கிளறி பூச்சிகளை உண்டது. அப்போது வானத்தில ராஜாளி பறவையின் கூட்டம் பறந்து கொண்டிருந் தது. அதைக் கண்ட ராஜாளி பறவை தானும் அதைப் போல பறக்க முடியவில்லையே என வருந்தியது.

உடனே ஒரு முனிவரிடம் சென்று கேட்டது. அதற்கு, அவர் "நீயும் ராஜாளி போல் பறக்கலாம். உன்னாலும் பறக்க முடியும். எனவே கவலைப்படாதே" என்று கூறினார். அதைக்கேட்ட ராஜாளி மகிழ்ச்சியுடன் வானத்தில் பறந்து சென்றது.

- எல். சரண்யாதேவி,
ஒன்பதாம் வகுப்பு, அரசு
மேல்நிலைப்பள்ளி, க.பரமத்தி,
கரூர் மாவட்டம்.



"அப்பா, எங்க டீச்சருக்குக் கடவுள் பக்தி அதிகம்னு நினைக்கிறேன்!"

"எப்படிடா சொல்றே?"

"என்னோட விடைத் தாளைப் பார்க்கும் போதெல்லாம் 'அடக்கடவுளே, அடக் கடவுளே'ன்னு சொல்லிட்டு இருக்காங்க!"

- குட்டி பிரசன்னா,
கரூர்

இளமைப் பருவம்

துள்ளிக் குதிக்கும் பருவம்
துணிந்து விளையாடும் பருவம்
அன்பைக் காட்டும் பருவம்
அறிவை வளர்க்கும் பருவம்
வேடிக்கை காட்டும் பருவம்
வேதனை புரியா பருவம்
முயற்சி செய்யும் பருவம்
முன்னேற துடிக்கும் பருவம்
உயர்வு தாழ்வு பார்க்காத பருவம்
உழைத்து உயரும் பருவம்

- க. சுரேஷ் குமார்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேல் நிலைப் பள்ளி,
க.பரமத்தி

உண்மையான நட்பு!




வேலம் என்ற சிற்றூரில் ஒரு சிறிய பள்ளிக் கூடம் இருந்தது. அதில் ராமன், வீமன் என்ற இரு நண்பர்கள் படித்து வந்தனர். இவர்கள் இருவரின் நண்பன் கிருஷ்ணன். அவன் ஊர் செவ்வூர். அவன் ஊரில் உள்ள மாரியம்மன் கோயிலில் விழா நடப்பதாகக் கூறினான். அதனால் அவன் ராமனையும் வீமனையும் அழைத்தான். இருவரும் செவ்வூர் விழாவிற்குச் செல்ல ஓர் ஆற்றைக் கடக்க வேண்டும். அதனால் அந்த ஆற்றைக் கடக்க படகில் சென்றனர்.

ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. படகு கவிழ்ந்தது. இருவரும் அடித்துச் செல்லப்பட்டனர். சிறிது தூரம் சென்றதும் ஒரு சிறிய மரக்கட்டை வந்தது. இருவரும் அதைப் பிடித்துக் கொண்டனர். அப்போது வீமன் ராமனைப் பார்த்து, "ராமா, உன் குடும்பத்தில் நீதான் ஒரே பையன். ஆனால் என் வீட்டில் என் தங்கை இருக்கிறாள். அதனால் நீ தப்பித்து வீடு சென்று விடு" என்று சொல்லிவிட்டு அவன் மரக்கட்டையை விட்டு விட்டான். வீமன் அதை ஏற்கவில்லை. இருவரும் வெள்ளத்தில் மூழ்க இருந்த வேளையில் ஒருவர் இருவரையும் காப்பாற்றி கரை சேர்த்தார். உண்மையான நட்பு உயிரைக் காப்பாற்றியது.

- பி. பிரகதீஸ்வரன்,

ஏழாம் வகுப்பு, அரசினர் மேல் நிலைப் பள்ளி, க.பரமத்தி

நா. மோகன்,
எட்டாம் வகுப்பு,
க.ஊ.ஒ.ந.நி.பள்ளி,
வீரியபட்டி




கரூர் ஸ்பெஷல்


மா. கார்த்திக்,
எட்டாம் வகுப்பு, க.ஊ.ஒ.ந.நி.பள்ளி,
வீரியபட்டி



ஜனவரி இதழ் சூப்பர்!



கடிதங்கள்



ஜனவரி கோகுலம் புதிய தலைப்புகளுடன் புத்தாண்டுச் சிறப்பிதழாக மலர்ந்திருந்தது. முன் அட்டையில் இருந்து பின் அட்டை வரை ஒவ்வொரு பக்கமும் அருமையாக இருந்தது. இளம் ஜோடியை மறைத்து இருந்த முதியவர் - மூதாட்டி ஓவியம் சூப்பர். தன் மனதை அடக்க இயலாதவன் எந்த வித்தைக் கற்று இருந்தாலும் சிறப்பு இல்லை என்று உணர்த்தியது 'உன்னால் முடியுமா?' கதை.

— சே. நம்பிகிருஷ்ணன்,
டி.வி.எஸ். அரசினர் மேல்நிலைப் பள்ளி,
திருக்குறுங்குடி

ஜனவரி இதழைப் பார்த்தேன். கடந்த மூன்று ஆண்டுகளாக கடும் முயற்சி செய்து, இந்த ஆண்டு சுழல் கோப்பையைப் பெற்று விடுவோம் என்று நினைத்தேன். ஆனால் இரண்டாம் இடம் தான் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதையே ஏணிப் படியாகக் கொண்டு, 2004ஆம் ஆண்டு எங்கள் பள்ளி சுழல் கோப்பையை வெல்லும் என்று உறுதியாகச் சொல்கிறேன்.

- வே. சுபஸ்ரீ,
பதினோராம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி,
நல்லூர்

நண்டு வளர்த்த மரம் மிக மிக நன்றாக இருந்தது. என் நண்பர்களுக்கும் மிகவும் பிடித்திருந்தது. மேப் வரைவோமா? பகுதி சுவாரசியமாக இருந்தது. ஜனவரி இதழ் எண்பது பக்கங்களும் சூப்பர்!

- செ. ராஜசேகர்,
ஏழாம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி, நல்லூர்.

'எண்ணி எண்ணி வியக்கத்தான் எறும்பு கொண்ட சிறப்பைப் பார். கண்டு கண்டு அவற்றைத்தான் கற்று உன்னை உயர்த்த பார்' என்று கவிதையைப் படைத்த தளவை இளங்குமரனுக்குப் பாராட்டுகள். 2004ஆம் ஆண்டு வண்ண காலண்டர் பயனுடையதாக இருந்தது. சேலம் ஸ்பெஷல் பொக்கிஷம். பரிசு பெற்ற ஓவியங்கள் பிரமாதம்!

- பா. அச்சுதன்,
வயலூர்

கவிதை வடிவில் அமைந்த அற்புதமான கதை நண்டு வளர்த்த மரம். படங்களும் ஜோர். ஸ்வார்ட்ஸ் பள்ளிக்கு எங்களின் வாழ்த்துகள்!

- ஆர்.ஜி.ஹரி,
திசையன் விளை

அமிர்தமும் விஷமும், சுட்டெரிக்கும் சூரியன், ஓவியப் போட்டி முடிவுகள் ஆகிய பகுதிகளுக்குச் சுற்றிப் போட வேண்டும். வண்ணப் படங்கள் அசத்தல்!

- ஜி. கவிதா,
ஆடுதுறை




சன் பாத் எடுக்கும் வால்ரஸ்

கடலில் வாழும் பாலூட்டி விலங்குகளில் ஒன்று. சீல் இனத்தைச் சேர்ந்தது. பசிபிக் வால்ரஸ், அட்லாண்டிக் என இரண்டு வகைகளில் காணப்படுகிறது. பதினெட்டுப் பற்கள் க்கு உண்டு. இதில் மேல் தாடையில் இரண்டு பற்கள் நீண்டு தந்தம் போல் வளர்ந்து இருக்கும். க்கும் சீலுக்கும் இதுவே வித்தியாசம். ஆண், பெண் இரண்டுக்கும் தந்தங்கள் உண்டு. சீல்களை விட உருவத்தில் பெரியது.

வடதுருவத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்கிறது. கூட்டமாக வாழும் குணமுடையது. மூன்றில் இரண்டு பகுதி நேரம் தண்ணீரிலேயே செலவிடும். அவ்வப்போது கரைக்கு வந்து சன் பாத் எடுப்பது என்றால் களுக்கு மிகுந்த விருப்பம்.

மூன்று முதல் நான்கு மீட்டர் நீளமிருக்கும். உடல் மிகவும் பரும னானது. ஆனால் கண் மிகவு சிறிதாக இருக்கும். மீசை முடிகள் நீண்டு வளர்ந்திருக்கும்.







தோல் 5 செ.மீ. அளவுக்குத் தடிமனாக இருக்கும். சுருக்கங்கள் நிறைந்திருக்கும். கால் விரல்கள் சவ்வு போன்ற தோலா


இணைக்கப்பட்டிருக்கும். [redacted] கால்களைத் துடுப்பு போல பயன்படுத்தி வேகமாக நீந்தும். பாதம் சொரசொரப்பாக இருக்கும். வழுக்கும் பனிக்கட்டிகள் மீது [redacted] ஏறி நடக்க இது உதவுகிறது.

நண்டு, நத்தை, கிளிஞ்சல் போன்றவற்றை [redacted] உண்ணும். ஒரு நாளைக்கு இரண்டு வேளை [redacted] வயிறு நிறையச் சாப்பிடும். பெரிய [redacted] ஒன்று ஒரு தடவைக்கு 3000 முதல் 6000 சிப்பிகளைச் சாப்பிடும். பெரும்பாலும் 10 மீட்டர் ஆழத்தில் உணவு [redacted]க்குக் கிடைத்து விடும். சில சமயங்களில் 80 மீட்டர் ஆழம் வரை சென்று உணவு தேடும். மண்ணிலுள்ள கிளிஞ்சல்களைக் கிளறி எடுக்கவும், எதிரியைத் தாக்கவும் [redacted] தந்தத்தைப் பயன்படுத்துகிறது.

முதிர்ந்த பசிபிக் [redacted] 800 முதல் 1,700 கிலோ எடை வரை இருக்கும். பெண் [redacted] 400 முதல் 1,250 கிலோ

வால்ரஸ்களிலும் ஆதிக்கப் போட்டி உண்டு. எடை அதிகமான, நீண்ட தந்தம் உடைய வால்ரஸ் கூட்டத்துக்குத் தலைமை ஏற்கும். எடை குறைந்த, உடைந்த தந்தங்களுடைய வால்ரஸ்கள் பணிந்து சென்று விடுகின்றன.

எஸ்.சுஜாதா





எடை வரை இருக்கும்.

நீரில் பெரும்பாலும் வாழ்ந்தாலும்  நிலத்தில்தான் 'குட்டி போடும். ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் குட்டிகள் பிறக்கும். ஒரு தடவைக்கு ஒரு குட்டிதான் பிறக்கும். அபூர்வமாக இரண்டு குட்டிகள் பிறப்பது உண்டு.  குட்டி பிறக்கும் போதே 45 முதல் 75 கிலோ எடை வரை இருக்கும்.

குட்டிகளுக்கு இரண்டு ஆண்டுகள் வரை தாய்  பால் கொடுக்கும்.  பாலில் 30% கொழுப்பும் 5 முதல் 10% புரோட்டீன், 60% தண்ணீர் உள்ளது.

களிலும் ஆதிக்கப் போட்டி உண்டு. எடை அதிகமான, நீண்ட தந்தம் உடைய  கூட்டத்துக்குத் தலைமை ஏற்கும். எடை குறைந்த, உடைந்த தந்தங்களுடைய  கள் பணிந்து சென்று விடுகின்றன.

பிரௌன் நிறத்தில்  காணப் படும். குட்டி  சாம்பல் நிறத்தில் இருக்கும்.

எஸ்கிமோக்களின் முக்கிய உணவு  இறைச்சி.  கொழுப்பி லிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். தந்தங்கள் விலை மதிப்புமிக்கவை. தோல் ஆடையாகப் பயன்படுகிறது. எனவே  எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது. பசிபிக்  இரண்டு லட்சம், அட்லாண்டிக்  ஐம்பதாயிரம் மட்டுமே இப்போது உள் ளன.

அமைதியான  பிராணியைக் காப்பாற்ற பலவித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

டிசம்பர் போட்டியில் ஆர்வத்துடன் நிறையப் பேர் கலந்து கொண்டனர். எட்டா வது பதிலில் சிலர் தவறு செய்திருந்தனர். சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை:

1. ஹோமர் - இலியட், ஒடிஸி
2. பிஸ்மில்லாகான் - ஷெனாய் இசை
3. கேல்ரத்னா - கர்ணம் மல்லேஸ்வரி
4. ஜோதிபாசு - நீண்டகால முதல்வர்
5. பாண்டவர்கள் - இந்திரபிரஸ்தம்
6. கண்வர் முனிவர் மகள் - சகுந்தலை
7. வெங்காயம்
8. தேன்சிட்டு



பரிசு பெற்றவர்கள்:


1. எஸ். திலகவதி, ஏழாம் வகுப்பு, வெஸ்லி ஆங்கிலப் பள்ளி, வில்லியனூர், பாண்டிச்சேரி
2. பெ. இளங்கோவன், பதினோராம் வகுப்பு, அரசு மேல் நிலைப்பள்ளி, மண்ணச்ச நல்லூர், திருச்சி மாவட்டம்.
3. ஆர். ஜீவசங்கீதா, எட்டாம் வகுப்பு, எவரெஸ்ட் மாரியப்ப நாடார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.
4. அ.சுபபிரகாஷ், ஏழாம் வகுப்பு, எ.பி.சி. வீரபாபு மெட்ரிகுலேஷன் பள்ளி, தூத்துக்குடி.
5. எஸ். வாணி, பன்னிரண்டாம் வகுப்பு, எத்தல் ஹார்வி பெண்கள் மேல் நிலைப் பள்ளி, சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

புதுமை!

கதை: கே.எஸ்.மணிகண்டன்,
எட்டாம் வகுப்பு, வேலூர்.
படம்: லலிதா





மூளைக்குள் சென்ற தேரை!

■ ஆர்.பொன்னம்மாள் ■

குறு முனி அகஸ்தியர் அஷ்டமா சித்திகளிலும் தேர்ந்தவர். பரமசிவன் பார்வதி தேவியைத் திருமணம் செய்து கொண்டபோது வட மாநிலம் சரிய, அகஸ்தியரைத் தென் மாநிலத்திற்கு அனுப்பி பூமியைச் சமமாக்கினார் ஈசன். அப்போது அவருடன் பல்லாயிரக்கணக்கான சீடர்களும் உடன் வந்தனர். அவர்களுள் ஒருவர் தேரையர். தேரையர் அவரது இயற்பெயரன்று.

காசிவர்மன் என்ற அரசனுக்குக் கடும் தலைவலி. எத்தனையோ வைத்தியம் செய்தும் குணமாகவில்லை. மண்டைக் குடைச்சல் காரணமாக அரசாங்க அலுவல்களைக் கவனிக்க முடியவில்லை! சரியாகச் சாப்பிட முடியவில்லை. மண்டைக்குள் யாரோ நீச்சலடிப்பது போலிருந்தது. அந்தச் சமயங்களில் கை, கால்கள் இழுத்துக் கொண்டன. கண் பார்வை மங்கியது. பேச்சு குழறியது. ஒருநாள் மனம் வெறுத்துத் தற்கொலை செய்து கொள்ள முற்பட்டான்.

மந்திரிகள் இதை அறிந்து பதறித் துடித்து பொதிகை மலையிலுள்ள அகஸ்தியரிடம் அழைத்துச் சென்றனர். அகஸ்தியர் மன்னன் தலையில் செவி வைத்துப் பார்த்தார். ஞான திருஷ்டியால் என்ன நடந்திருக்குமென ஆராய்ந்தார்.

பிறகு "அரசே! நீ உறங்கும்போது ஒரு தேரைக்குட்டி உன் மூக்கு வழியே தலைக்குள் போய்விட்டது. அது நரம்புகளில் சஞ்சரிக்கும்போது கை, கால், கண், வாயெல்லாம் செயலிழக்கின்றன. அது உன் இரத்தத்தை உறிஞ்சுவதால் தலைவலி ஏற்படுகிறது" என்று விளக்கினார்.

வேந்தனுக்குத் தலை சுற்றியது. "இதற்கு நிவாரணமே இல்லையா? இப்படியே நான் மரணமடைய வேண்டியதுதானா?" என்று பரிதாபமாக இறைஞ்சினான்.

"கவலைப் படாதே! நானிருக்கிறேன்" என்று தைரியம் சொல்லித் தேற்றினார் அகஸ்தியர்.

மன்னனின் தலையிலிருந்து முடிகளை அகற்றி ஏதோ ஒரு மூலிகைச் சாற்றைப் பூசினார். சிறிது நேரம் கழித்து தன் நீண்ட நகத்தால் மண்டையில் கோடு கிழித்தார். கபாலம் திறந்தது. மன்னன் மயக்க நிலையில் இருந்தான். திறந்த மண்டைக்குள் மூளையில் ஒரு தேரைக்குஞ்சு மிரளமிரள விழித்தபடி அமர்ந்திருந்தது.

அதை எப்படி எடுப்பது? ஏதாவது ஒரு நரம்பில் தவறாக நகம் பட்டாலோ, எடுக்கும்போது தேரை வேறு பக்கம் ஓடினாலோ விளைவு விபரீதமாகி விடும். தேரையைத் தானாக வெளியே குதிக்கச் செய்ய வேண்டும். அகஸ்தியர் குழம்பினார்.

அப்போது தேரையர் ஓர் அகன்ற மண் சட்டியில் நீரை முகர்ந்து வந்து, மன்னன் தலைக்கருகில் பிடித்து விரலால் நீரை அளைந்து சத்தமெழுப்பினார். தேரை உற்சாகத்தோடு தாவிக் குதித்தது. அகஸ்தியர் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை!


மண்டையோட்டை மூடி 'சந்தான கரணி' என்ற மூலிகைச் சாற்றைப் பூசினார். மயக்கம் தெளிந்து எழுந்த மன்னன், அகஸ்தியரைப் பல தடவை விழுந்து நமஸ்கரித்தான். அகஸ்தியர் கேட்டுக் கொண்டபடி பல ஆலயங்களுக்குத் திருப்பணி செய்தான்.

அகஸ்தியரும் தேரையரின் சமயோஜிதத்தை வெகுவாகப் பாராட்டினார். அது முதல் அவரைத் 'தேரையா' என்றே அழைத்தார். மற்ற சீடர்களும் அப்படியே கூப்பிட்டனர்.

பாண்டிய மன்னன் ஒருவனுக்கு நெடு நாளாக சிம்மாசனத்தில் உட்கார முடியாமல் இடுப்புவலி ஏற்பட்டிருந்தது. அதற்கு வைத்தியம் செய்ததில் முதுகெலும்பு வளைந்து கூன் விழுந்தது.

காசி மன்னன் தன் நண்பனை அகஸ்தியரிடம் போகும்படி சிபாரிசு செய்தான். பாண்டியன் அகஸ்தியரை வணங்கி தன் குறையைத் தீர்த்தருளும்படி வேண்டினான்.

அகஸ்தியர் மன்னனின் கூன் எலும்பைச் சோதித்த பின்



சில அபூர்வ மூலிகைகளையும், வேர்களையும் கொண்டு வரும்படி பணித்தார்.

தேரையர் எடுத்து வந்ததும், அவற்றை நசுக்கி ஒரு மண் கலயத்தில் போட்டு அத்தி, அரசு, ஆல், வேப்பமரச்சுள்ளிகளால் கொதிக்க வைத்தார்.

"தேரையா! கட்டாயமாக வெளியே போக வேண்டியிருக்கிறது. சடசடப்பு அடங்கி எண்ணெய்ப் பதம் வந்து விட்டால் இறக்கி வை. தீய்ந்து விட்டாலோ, பக்குவம் வரும் முன் இறக்கி வைத்தாலோ பயன்படாது. ஜாக்கிரதையாகச் செயல்படு. மறுபடி பௌர்ணமி வந்தாலே வேர் பறிக்க முடியும்" என எச்சரித்துச் சென்றார்.

தேரையர் விழிப்போடு பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று 'படார்' என்ற வெடிச் சத்தம். மன்னனும், மற்ற சீடர்களும் ஆசிரமத்துள் வந்து பார்த்தனர். கூரையின் மேற்பரப்பில் துணிகள் வைக்க வளைத்துக் கட்டப்பட்டிருந்த மூங்கில் வெடித்து நிமிர்ந்திருந்தது.

மூலிகைச் சாற்றை இறக்கி வைத்து அடுப்பைத் தணித்தார். அகஸ்தியர் திரும்பி வந்து மூலிகைத் தைலம் இறக்கி வைக்கப் பட்டிருப்பதைக் கண்டார்.

"தேரையா! பூரணமாகத் தைலம் வராமல் இறக்கி வைத்து விட்டாயே! இதுதான் பதம் என்று உனக்கெப்படி தெரியும்?" என்று கோபித்தார்.

"குரு தேவா! மூலிகையின் ஆவி பட்டு வளைந்த மூங்கில் நிமிர்ந்து விட்டது. இதைவிட என்ன ருசு வேண்டும்?" என்று பணிவோடு கூறினார் தேரையர்.

அகஸ்தியர் சமாதானமாகி மன்னரின் கூன்முதுகில் தைலத்தைக் காய காயத் தடவி வந்தார். என்ன ஆச்சர்யம்! தினந்தோறும் சிறிது சிறிதாக நிமிர்ந்த கூன்; தைலம் தீருவதற்குள் முற்றிலும் சரியாகி விட்டது.

அகஸ்தியர் சீடரைப் பாராட்டினார். பாண்டிய மன்னன் குரு தட்சிணையாக அகஸ்தியர் விரும்பியபடி அன்ன சத்திரங்கள் கட்டினான்.

மற்றொரு சமயம் தவயோகியொருவர் தீராத வயிற்று வலியோடு அகஸ்தியரிடம் வந்தார். அகஸ்தியரும் நுட்பமாக ஆராய்ந்து மூலிகை வேரெடுத்து, சாறு பிழிந்து கொடுத்தார். ஆனால் வியாதி குணமாகவில்லை!

"தேரையா! மருந்து சரியானதாயிருந்து நோய் நிவர்த்தியாகவில்லையே! காரணத்தை நீ ஆராய்ந்து பார்" என்றார் குறுமுனி.

தேரையர் அதே மருந்தை கொருக்குக் (மூங்கிலைப் போல் ஓட்டையுள்ள சமித்து) குச்சியால் பொறுமையாகத் தொண்டைக் குழிக்குள் செலுத்தினார். இரண்டே நாளில் வலி மாயமாய் மறைந்தது.

"அதிகமாகக் காயகல்பம் சாப்பிட்டிருக்கிறார் இவர். பற்களில் அவை தங்கியிருக்கின்றன. பல்லில் படும் மூலிகை ரசம் பயனற்றுப் போய்விடுகிறது. அதனால்தான் தொண்டைக்குள் நேராக விட வேண்டியதாயிற்று" என்று விளக்கம் சொன்னார் சிஷ்யர்.

யோகியும், மற்றவர்களும் தேரையரைப் புகழ்ந்தனர். அகஸ்தியருக்குப் பொறாமையாக இருந்தது.

"தேரையா! நீ குருவை மிஞ்சிய சீடனாகி விட்டாய்! நாம் பிரிந்து விடுவோம்" என்று வேறிடம் சென்று விட்டார். தேரையருக்கு வருத்தமாயிருந்தது.

பல ஆண்டுகள் கழித்து அகஸ்தியருக்



இந்தியாவில் சுமார் 6150 நூலகங்கள் உள்ளன. தமிழகத்தில் சுமார் 1500 நூலகங்களுக்கு மேல் உள்ளன. சென்னை கன்னிமாரா, தஞ்சை சரஸ்வதி மஹால், அடையாறு உ.வே.சா. நூலகங்கள் தமிழ் நாட்டில் புகழ் பெற்றவை.

குக் கண் பார்வை மங்கியது. சீடர்களின் சிகிச்சை பலனளிக்கவில்லை!

ஞானதிருஷ்டியில் தேரையர் எங்கிருக்கிறார் என்று பார்த்த அகஸ்தியர், "சீடர்களே! அநாமயம் என்ற வனத்தில் பூமிக்குள் தவம் இருந்து வெளி வந்த ஒரு ரிஷி இருக்கிறார். அவர் மூலிகை ரகசியம் அறிந்தவர். அவரை அழைத்து வந்தால் என் பார்வை திரும்பும். வெயில் காலமாதலால் புளியமர நிழலில் ஓய்வெடுங்கள்" என்று சொல்லியனுப்பினார்.

குருநாதர் சொன்னபடி புளியமர நிழலில் ஓய்வெடுத்து, ஆறு நாட்களில் தேரையர் இருக்குமிடம் சேர்ந்தனர். ஆனால் அதற்குள் அவர்கள் இளைத்திருந்தனர். துப்பினால் இரத்தம் வந்தது.

''புளிய மர நிழலில் ஓய்வெடுத்தீர்களா? புளியமரக் காற்று எலும்பை உருக்கி விடுமே! சரி. போகும்போது வேப்ப மர நிழலில் களைப்பாறுங்கள். சரியாகி விடும்" என்றார் தேரையர்.

ஆறு நாட்கள் வேப்ப மர நிழலில் தங்கிய சீடர்களின் மூக்கிலும், வாயிலும் இரத்தம் வருவது நின்று, உடல் ஆரோக்கியமடைந்தது.

புளிய மர நிழல் உஷ்ணம் என்றால் வேப்ப மரக் காற்று குளிர்ச்சி என்பதை சிஷ்யர்கள் அனுபவபூர்வமாக உணர்ந்தனர்.

"சீடா, நலமா? கண் வெடிச்சான் மூலிகை கொண்டு வா. நானே தைலம் தயாரித்துக் கொள்கிறேன்" என்று சொல்லி விட்டார் குருதேவர்.

குருவார்த்தையை மீற முடியுமா? துர்க்கையை நோக்கித் தவமிருந்தார் தேரையர்.

துர்க்கை பிரசன்னமானாள்.

"குழந்தாய்! என்ன வரம் வேண்டும்?" எனக் கேட்டாள்.

"தாயே! குரு முனி என்னைச் சோதிக்கிறார். குரு சாபம் வராமல் நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும். கண் வெடிச்சான் மூலிகையை ஒடித்தால், அதிலிருந்து வரும் புகை பார்வையை அவித்து விடுமே! இந்த இக்கட்டிலிருந்து விடுவிக்கும் வல்லமை தங்களுக்கே உண்டு" என வணங்கினார்.

கண்வெடிச்சான் மூலிகை தேரையர் முன் கிடந்தது. தேவி புன்முறுவலோடு பல சித்திகளை அருளி மறைந்தாள்.

தேரையர் மகிழ்ச்சியோடு மூலிகைகளைப் பறித்துச் சென்று அகஸ்தியர் விழிகளுக்குப் புத்துணர்ச்சியூட்டினார்.


''குருவே! ஒடித்தாலே கண்களை அவிக்கும் இந்தக் கண் வெடிச்சான் மூலிகையை எதற்குக் கேட்டீர்கள்?" என்று வினவினார் சீடர்.

''குழந்தாய்! புலி, சிங்கம் போன்ற கொடிய மிருகங்கள் சில சமயம் இங்கே வந்து விடுகின்றன. கொடிய நாகங்கள் வருகின்றன. இதை ஒடித்து வீசி எறிந்தால் அவை குருடாகி ஓடி விடும். அதைக் கொண்டு வர தேவி பக்தனான உன்னாலேயே முடியும். அதோடு உன் பெருமை உலகறிய வேண்டும் என்றே இச்சோதனையை வைத்தேன். தங்கத்தை நெருப்பிலிட்டுத் தட்டித் தட்டித்தானே நகை செய்ய முடியும்! நீயும் இப்போது அற்புதமான ஆபரணமாகி விட்டாய்!" என்று மனமாரப் பாராட்டினார் அகஸ்தியர்.

தேரையரும் குருவை வணங்கி மக்கள் நோய் தீர்க்கும் மருத்துவராய்த் திகழ்ந்தார்.

கி.பி.1480ல் பதினோராம் லூயி மன்னர் பாரீஸில் நூலகம் அமைத்தார். இதை அரசர்கள் மட்டுமே பயன்படுத்தலாம். 17ஆம் நூற்றாண்டில்தான் பொது மக்கள் பயன் படுத்தும் முறை வந்தது.

— ஆர். ராஜலக்ஷ்மி, கரூர்




கடல் பிராணிகளின் பெயர் என்ன?

பூமி மூன்று பங்கு கடலால் சூழப்பட்டுள்ளது. இக்கடலில் ஏராளமான உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றில் பறப்பன, வேகமாக நீந்துவன, மெதுவாக நீந்துவன, நடப்பன, ஊர்வன, தண்ணீரால் அசைவன எனப் பல பிரிவுகள் உள்ளன. இங்கே இருக்கும் உயிரினங்களின் பெயர்களையும், அவை எந்தப் பிரிவைச் சேர்ந்தவை என்றும் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

விடை: 74ஆம் பக்கம்.




5
6
7
8
9
10
11
12

ஹலோ சுகமா?

கிளப்டோமேனியா என்றால் என்ன?

● ந. சுந்தரவடிவேலு, பல்லடம்.

? டாக்டர்களின் மருந்துச் சீட்டில் R என்னும் எழுத்து உள்ளது. இது எதைக் குறிக்கிறது டாக்டர்?

! அலோபதி டாக்டர்களின் மருந்துச் சீட்டில் உள்ளது 'ஆர்' மட்டுமல்ல. அது 'ஆர், எக்ஸ்'. இதற்கு Recipe என்று பெயர். 'இதில் காணும் மருந்துகளை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று நோயாளிக்கு உணர்த்தும் வகையில் 'டேக்' (Take) என்றும் ஒரு பொருள் உண்டு. அடுத்து, பரிந்துரைத்தல் (Prescription) என்னும் பொருளும் இதற்கு உண்டு. அதாவது இப்போது உள்ளது போல் பண்டைய காலத்தில் மருந்துகள் தயார் நிலையில் இருக்காது. மருத்துவர் இந்தந்த மருந்துகளை இந்தந்த விகிதங்களில் கலந்து தயார் செய்து நோயாளிக்குத் தரவேண்டும் என்று மருந்து தயாரிப்பவருக்கு அறிவுறுத்துவதற்கு உதவும் வகையில் இக்குறியீடு பயன்பட்டு வந்தது.

● சு. வெண்ணிலா, தஞ்சாவூர்.

? 'கிளப்டோமேனியா' என்றால் என்ன நோய், டாக்டர்?

! இது ஓர் உளவியல் நோய். சிறு சிறு பொருள்களைத் திருடும் எண்ணம் ஏற்படுத்துகின்ற ஒரு வித்தியாசமான மனநோய். இந்த நோயுள்ளவர்கள் மற்றவர்களின் கவனம் திசை திரும்பும்போது அவர்களின் பொருள்களைத் திருடிவிடுவார்கள். இப்படி திருடுவதன் மூலம் பணக்காரர் ஆகிவிட வேண்டும் என்பது இவர்களின் நோக்கமல்ல. மற்றவர்களை முட்டாள்களாக்கி விட்ட மனமகிழ்ச்சி இவர்களுக்குக் கிடைக்கிறது. இத்தகைய நோய் உள்ளவர்கள் சிறுவயதில் பொருள்களை இழந்திருக்கலாம். வீட்டில் பெற்றோர்களின் கவனிப்பு நிறைவாக இல்லாமல் இருந்திருக்கலாம், அல்லது அன்புக்காகத் தவித்திருக்கலாம். எண்ணியது கிடைக்காத ஏமாற்றம் அடிமனதில் புதைந்திருக்கலாம். நம் சமூகத்தின் மீது வெறுப்பு உண்டாகியிருக்கலாம். இவற்றுக்கெல்லாம் ஒரு வடிகாலாகத் திருட்டுக் குணம் இவர்களுக்கு ஏற்படுகிறது. பிறர் பொருள்களைத் திருடுவதன் மூலம் தாங்கள் ஏதோ பெரிதாகச் சாதித்து விட்டதைப் போல் மனநிறைவடைகிறார்கள்.


● இரா. அன்புச்செல்வி,
சென்னை - 7.

? ஒருவர் ரத்ததானம் செய்யும் முன்பு என்னென்ன பரிசோதனைகளைச் செய்து கொள்ள வேண்டும்?

! ரத்ததானம் செய்பவரின் வயது 18 லிருந்து 55 வயது வரை இருக்க வேண்டும். அவரது உடல் எடை 45 கிலோவிற்குக் குறையக் கூடாது. இந்த இரண்டும் சரியென்றால், அடுத்து அவரது ரத்த அழுத்தத்தை அளவிட வேண்டும்.







அது 120/80 முதல் 140/90 மி.மீ. பாதரச அளவு வரை இருக்கலாம். பிறகு, ஹீமோகுளோபின் அளவைச் சோதிக்க வேண்டும். அது 14 சதவிகிதத்திற்குக் குறையக் கூடாது. இதைத் தொடர்ந்து இதய நோய்க்கான பரிசோதனையைச் செய்து கொள்ள வேண்டும். மேலும் மஞ்சள் காமாலை, மலேரியா, டைபாய்டு, எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்களுக்கான பரிசோதனைகளும் செய்யப் பட வேண்டும். இந்த நோய்கள் எதுவும் ரத்ததானம் செய்பவருக்கு இருக்கக் கூடாது.

● கு. குழந்தைவேலு, பெங்களூர் -2.

? எனக்குத் தூசியினால் அலர்ஜி ஏற்படுகிறது. இதை எப்படி தடுக்கலாம் டாக்டர்?

! சுற்றுப்புறச் சூழல் மாசு ஏற்படுவதைத் தடுக்காதவரை தூசியினால் உண்டாகும் ஒவ்வாமையை முழுமையாகத் தடுக்க இயலாது. எனினும், கீழ்க்காணும் முறைகளில் ஓரளவிற்குக் கட்டுப்படுத்த இயலும். 1. வீட்டையும் அலுவலகத்தையும் தூசு இல்லாமல் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். 2. தரையைப் பெருக்குதல், ஒட்டடை அகற்றுதல் போன்ற பணிகளை நீங்கள் செய்யாதீர்கள். அடுத்தவர்கள் செய்யும் போதும் அருகில் இருக்காதீர்கள். 3. இரவில் படுக்கப் போகும் முன்பு தரையை ஈரத் துணியால் துடைத்துவிடச் சொல்லுங்கள். 4. சாலைகளில் செல்லும்போது முகமூடி அணிந்து கொள்ளுங்கள். அல்லது மூக்கில் வடிப்பானைப் பொருத்திக் கொள்ளுங்கள். 5. தூசியைக் கிளப்பும் கால்பந்து, கிரிக்கெட், கூடைப்பந்து போன்ற விளையாட்டுகளை விளையாடாதீர்கள். பதிலாக, கேரம், செஸ், டேபிள் டென்னிஸ் போன்ற உள்ளரங்க விளையாட்டுகளை விளையாடுங்கள். 6. பணிவசதி இருந்தால் அலுவலக அறை, படுக்கையறை, கார் போன்றவற்றில் குளிர்சாதன வசதியைச் செய்து கொள்ளுங்கள்.

புதிர் இங்கே! விடை கீழே!

1. நாக்கின் நுனியில் எந்தச் சுவையை உணர இயலாது?
   அ) இனிப்பு ஆ) புளிப்பு இ) கசப்பு

2. மனித மூளையின் சராசரி எடை எவ்வளவு?
   அ) 1400 கிராம் ஆ) 2000 கிராம் இ) 2200 கிராம்.


3. இவற்றில் எந்தச் சூழலில் நம்மால் வண்ணங்களைச் சரியாகக் கண்டறிய இயலாது?
   அ) சந்திர ஒளியில் ஆ) வான்வெளியில் இ) தண்ணீருக்கு அடியில்

4. வலியைப் போக்கும் இயக்குநீர் எது?
   அ) தைராய்டு ஆ) அட்ரீனலின் இ) எண்டார்பின்

5. மனித மூளையில் நினைவாற்றலுக்கு உதவும் முக்கியமான பகுதி எது?
   அ) ஹைப்போதலாமஸ் ஆ) மெடுல்லா இ) ஹிப்போகாம்பஸ்

1. ஆ 2. அ 3. அ 4. இ 5. இ

விடை இங்கே!



விஞ்ஞானி கடத்தல்!
10
கதை, படம்: முத்து
மாரி, அசையாதே. இந்தத் துப்பாக்கியால் சுட்டுடுவேன்.
ஐயோ... துப்பாக்கி பேசுதே!
மறைந்திருந்த ரகு சுட்டதில் மாரி தடுமாறினான்.
அங்கிள், நான் ரகு. பயப்படாமல் வாங்க. தாத்தாவைக் கண்டுபிடிச்சிட்டேன்.
குழம்பி நின்ற மாரியை ஆகாஷ் தாக்கினான்.
ஆ ஐயோ...


ஆகாஷ் தாக்குதலில் விழுந்தான் மாரி.
ரகு, தாத்தாவைப் பார்த்தீயா?
ஆமாம். இங்கதான் இருக்கார். ஆனால்...
சுய நினைவில் இல்லை. என்னையே துப்பாக்கியால் சுட வந்தார்.
ஹிப்னாடிச மயக்கத்தில் வச்சிருப்பாங்க...
இருவரையும் விஞ்ஞானி இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றான் ரகு.
விஞ்ஞானி கோபத்துடன் நின்றிருந்தார்.
நீங்கள் யாராக இருந் தாலும் கவலை யில்லை.
என் ஆராய்ச்சிக்கு இடையூறு செய்வதை அனுமதிக்க மாட்டேன்.
!


அதற்குள் மறைந்திருந்த ரகு துப்பாக்கியைத் தட்டி விட்டான்.
ஸாரி தாத்தா! வேறு வழி இல்லை. இந்த அதிர்ச்சி உங்கள் மயக்கத்தை அகற்றும்.
அதிர்ச்சியில் தடுமாறிய விஞ்ஞானி திருதிருவென விழித்தார்.
நான்... நீங்க யார்? ஜானு, ஆகாஷ் தானே!
தாத்தா, எங்களைத் தெரியுதா?
ஆமாம். நீங்க என்னைக் காப்பாத்திட்டீங்க!
விஞ்ஞானி சந்தோஷம் அடைந்தார்.
ரகு எங்கே?
இங்கேதான் இருக்கேன் தாத்தா. உங்க மாத்திரையைச் சாப்பிட்டு மறைஞ்சிருக்கேன்.


மாரியையும், கிச்சாவையும் கட்டிப் போட்டனர். மாரியின் செல்போனை எடுத்துக் கொண்டான் ஆகாஷ்.
போலீஸுக்குத் தகவல் சொல்லிட்டு நாம் கிளம்பலாம். மீதியை அவங்க பார்த்துப்பாங்க.
சரி, கிளம்புவோம்.
ரகுவிற்குத் தண்ணீர் கொடுத்து சுய உருவிற்கு வரவழைத்தனர்.
என்ன ஜானு, விடுமுறை எப்படி இருந்தது?
ரொம்ப த்ரில்லா இருந்தது தாத்தா!
ஏன் இந்தக் காட்டில் இப்படி கஷ்டப்படறீங்க? எங்களோட வந்து தங்குங்க.
வீட்டிற்குக் கிளம்பினர்.
நீங்க சொல்றதும் சரிதான். இனிமேல் உங்களோடயே இருக்கலாம்ன்னு முடிவு பண்ணிட்டேன்.
தேங்க்ஸ் தாத்தா.
(முற்றும்)


கோகுலம் – ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்®

இணைந்து வழங்கும் 'புதிய பாரதம்'

எழுத்தாளராவது எப்படி?



• தலைமையாசிரியர்



• ரேவதி

'புதிய பாரதம்' மூன்றாவது நிகழ்ச்சி சென்னையில் உள்ள அசோக் நகர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. 4.12.2003 அன்று காலை 11 மணிக்கு 'எழுத்துக்கலை' என்ற தலைப்பில் ஆரம்பித்தது. கோகுலத்தின் முன்னாள் கௌரவ ஆசிரியரும் சிறந்த குழந்தை எழுத்தாளருமான ரேவதி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

"எழுத்துக் கலையை வளர்த்துக் கொண்டால் எந்த வயதிலும், எந்தத் துறையில் இருந்தாலும் பயன்படுத்திக் கொள்ள முடியும். கற்பனை வளம் எல்லோருக்கும் இருக்கிறது. வித்தியாசமாகக் கற்பனை செய்தால் சுவையான விஷயங்கள் கிடைக்கும். ஒரு மனிதன் காலால் நடந்தால் அது வழக்கமான விஷயம். அதே மனிதன் காலை மேலே தூக்கிக் கொண்டு கைகளால் நடந்து சென்றால் எப்படி இருக்கும்? இதை வைத்து ஒரு சுவாரசியமான கதை எழுதலாம்.


"நிறையப் புத்தகங்கள் படித்தால் சொல் வளம் கிடைக்கும். நாம் எழுதும் கதையோ, கவிதையோ படிப்பவர்களைக் கவர வேண்டும். நீங்கள் எழுதிய கதையை முடிக்காமல் உங்கள் தோழிகளிடம் படிக்கக் கொடுங்கள். கதையைப் படித்து விட்டு முடிவு என்ன என்று ஆர்வமாகக் கேட்டால் அது நல்ல கதை. ஒன்றும் சொல்லாமல் திருப்பிக் கொடுத்தால் கதையில் ஏதோ கோளாறு என்று புரிந்து கொள்ளலாம். கதையை மனதுக்குள் ஊறப் போட்டு யோசித்து விட்டுப் பிறகு எழுத வேண்டும். ஒரு முறை எழுதியதை மற்றவர்களிடம் காண்பித்து ஏதாவது திருத்தம் செய்து, மறுபடி எழுதிப் பார்த்தால் இன்னும் கச்சிதமாக வரும். சிறுவர்களுக்காகக் கதை எழுதும் போது தவறான கருத்துகளைச் சொல்லிவிடாமல் கவனமாக இருக்க வேண்டும்.

"கவிதையைப் பொறுத்த வரை, சிறு வாக்கியங்களில், மூன்று வார்த்தை







• கதை, கவிதை சொன்ன மாணவியர்....

களில் எதுகை மோனையோடு எழுதினால் நன்றாக வரும்.

"தென்னை மரத்தில் ஏறினால் தேங்காயைப் பறிக்கலாம்! மா மரத்தில் ஏறினால் மாங்காயைப் பறிக்கலாம்! வாழை மரத்தில் ஏறினால் வழுக்கி வழுக்கி விழலாம்' என்ற வள்ளியப்பாவின் பாடலைக் குறிப்பிட்டுப் பேசினார் ரேவதி.

இதன் பிறகு பி. தனவந்தினி, டி.காப்ரியா, அஞ்சுகம், ஜானகி, சசிகலா, ரூபா, மனோரஞ்சனி, மஹாலக்ஷ்மி, லாவண்யா, ஜெப ஆனந்தி, பவித்ரா, புவனேஸ்வரி, தீபா, கவிதா, காயத்ரி துர்கா போன்ற மாணவியர் தங்கள் கதை, கவிதைகளை மேடையில் அரங்கேற்றினர். கதை, கவிதைகளை இன்னும் எப்படி அழகாக்கலாம் என்று டிப்ஸ் கொடுத்தார் ரேவதி.

பள்ளியின் தலைமை ஆசிரியர் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றுப் பேசினார். இருநூற்றி ஐம்பது மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். கதை, கவிதை எழுதக் கூடிய மாணவியர் இந்நிகழ்ச்சி தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று மகிழ்ச்சியுடன் கூறினர். பங்கேற்ற மாணவியர், ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர் மற்றும் சிறப்பு விருந்தினர் ஆகியோருக்கு கோகுலம் - ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் சார்பாக பரிசுகள் வழங்கப்பட்டன.

படங்கள்: ஸ்ரீஹரி



வாழ்க்கை

வாழ்க்கை என்பது ஒரு கடிகாரம்
அதில் நாம் —
சுற்றிச் சுற்றி வருகின்ற நேரம்
அந்த நேரத்தைச் செலவழிக்கின்ற காலம்
நம்மைத் தேடி வரும் வரம்
நல்ல வாய்ப்பைத் தவற விட்டு வீழ்ந்தாயே,
மற்றொரு வாய்ப்பில் எழுவாயா?

— டி.காப்ரியா,
ஏழாம் வகுப்பு


மதி...விதி..!

வெற்றி யென்றால் மதி
தோல்வி யென்றால் விதி
மனிதா நீயே
ஒரு சந்தர்ப்பவாதி

— மு. அஞ்சுகம்,
ஏழாம் வகுப்பு

மிக்ஸர் பிட்ஸ்

மிதக்கும் உணவகம்!



உலகில் முதல் நடமாடும் மருத்துவ மனை 1991ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26ஆம் தேதி இந்தியாவின் பீகார் மாநிலத்தில் தொடங்கப்பட்டது. இது லைஃப்லைன் எக்ஸ்பிரஸ் அல்லது ஜவீன்ரேகா எக்ஸ்பிரஸ் எனப் பெயரிட்ட ஒரு ரயில் வண்டி மருத்துவமனை. இது நகரங்களுக்குச் சென்று சிகிச்சை பெற முடியாத கிராம வாழ் மக்களுக்குப் பெரும் சேவை செய்து வருகிறது.

- அ.பேச்சியப்பன்,
ராஜபாளையம்

பழங்கால நாகரீகங்களான, கிரீஸிலும், ரோமாபுரியிலும் விசிறிகள் பயன்படுத்தப் பட்டன. வில்லியம் என்னும் ஆதிகால அரசரே ஃபிரான்சிலிருந்து இங்கிலாந்திற்கு விசிறிகளை அறிமுகப்படுத்தினார். தமிழகத்தில் பனை விசிறிகளைக் கண்டுபிடித்தது சமண முனிவர்களே!




- நெ. இராமன்,
சென்னை

கட்டெறும்பு கடிக்கிறது என்று சொல்கிறோம். ஆனால், உண்மையில் கட்டெறும்பு கடிப்பதில்லை. அது சிவப்பு நிறத்தில் உருவத்தில் மிகப் பெரியதாக இருக்கும். அதன் பின் பகுதி ஒரு சிறிய பல்பு போன்று இருக்கும். அதற்குள் இருக்கும் திரவம் 'லாக்டிக் அமிலம்'. இந்த லாக்டிக் அமிலத்தை எறும்பு தன் கொடுக்கு மூலமாக ஊசி போடுவது போன்று நம் உடலினுள் செலுத்தி விடும். அந்த அமிலத்தினால்தான் நமக்கு வலி உணர்ச்சி ஏற்படுகிறது.




- என். ஜரினா பானு,
திருப்பட்டினம்

உலகிலேயே மிகப் பெரிய மிதக்கும் ஹோட்டல் ஜப்பானில் உள்ளது. 140 கோடி




ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்த ஹோட்டல் கப்பலின் மொத்த எடை 34,000டன். ஜப்பானிய வடக்குக் கடற் பகுதியிலுள்ள ஆழ்கடல் எண்ணெய்க் கிணறு ஊழியர்களுக்காகக் கட்டப்பட்ட இந்த மிதக்கும் ஹோட்டலில் உணவகம்



மட்டுமல்ல, திரையரங்கு, மருத்துவமனை ஆகியவையும் உள்ளன.

- ஏ.எல். பாத்திமா,
காரைக்கால்

உலகில் முதல் கேமராவை உருவாக்கியவர், உலகின் முதல் புகைப்படத்தை எடுத்தவர் 'ஜுனியஸ் ஜோஸப் நிஸ்போர் நீப்ஸ்' ஆவார். ஃபிரான்ஸ் காரரான நீப்ஸ் மருத்துவர், விஞ்ஞானி, கண்டு பிடிப்பாளர். 1826இல் கோடை காலத்தில் ஒரு நாள் 'கிராஸ்'




அருகேயுள்ள செயின்ட் லூப் டி வாரன்ஸிலுள்ள தனது எஸ்டேட் வீட்டின் ஜன்னல் வழியே வெளிப்புறக் காட்சியைப் புகைப்படமெடுத்தார் நீப்ஸ். இதுதான் உலகின் முதல் புகைப்படமாகும்.

உலகிலேயே குட்டையான மரங்கள் என்று கருதப்படும் 'வில்லோ மரங்கள்' கிரீன்லாந்தின் குன்றுராவில் இருக்கின்றன. இவை எத்தனை வருடங்கள் ஆனாலும் இரண்டு அங்குல உயரத்திற்கு மேல் வளர்வது இல்லை. ஆகையால் இவைதான் உலகிலேயே குட்டையான மரங்கள் எனப்படுகின்றன.

- எஸ். மோகன்ராஜ்,
சீர்காழி

* பிளைவுட் அட்டையைக் கண்டு



பிடித்தவர் இம்மானுவெல் நோபல். இவர் வெடி மருந்தைக் கண்டு பிடித்த மற்றும் நோபல் பரிசை உருவாக்கிய ஆல்பர்ட் நோபலின் தந்தை.

* கசகசாவிலிருந்து மார்பைன் என்ற மருந்தைப் பிரித்தெடுத்தவர் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த பிரடெரிக் வில்ஹெல்ம் ஆடாம் பெர்டினான்ட் ஸெர்ட்டர்னர். இம்மருந்து தூக்கம் தரும் தன்மை உடையதாக இருந்ததால் ரோம தூக்கக் கடவுளான மார்பியோஸின் பெயரால் மார்பின் என பெயரிட்டார்.

- சா. அனந்த குமார்,
கன்னியாகுமரி





துரோகி

விளையாட்டுப் பந்தயங்களில் முதலிடம் பெற்ற காவிரி அணியினருக்குக் கை கொடுக்கத்தான் எல்லா மாணவர்களும் ஓடினார்கள். ஆனால் அடுத்த நொடியே அவர்கள் கவனம் கலைந்தது.

'லைம் அண்ட் ஸ்பூன்' பந்தயத்தில் இரண்டாவதாக வந்திருந்த அகல்யா மயக்கம் போட்டு விழுந்திருந்தாள்.

பதற்றம் வேகமாகப் பரவியது. ஆலிஸ் அகல்யாவின் முகத்தில் தண்ணீரைத் தெளித்தாள். ராஜூ அருகிலிருந்த ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து காற்று வரும் படி விசிறினான். சரவணபெருமாள் சுற்றிலும் நின்றவர்களைச் சற்று விலக்கி, காற்றும் வெளிச்சமும் கிடைக்க வழி செய்தான். பிரகாஷ், செல்வராஜ் சாரிடம் ஓடிச் சென்று ''பக்கத்தில் யாராவது டாக்டர் இருக்காரா?'' என்று கேட்டான்.

நல்ல வேளையாக அதே தெருவில் ஒரு க்ளினிக்கும் இருந்தது. அதில் டாக்டரும் அப்போது இருந்தார்.

டாக்டர் வருவதற்குள் அகல்யாவின் மயக்கம் தெளிந்துவிட்டிருந்தது. ஆனால் தன் வலது காலைப் பிடித்துக் கொண்டு வலியில் முனகினாள். அங்கு சிவப்பாக, சின்னதாக ஒரு திட்டு காணப்பட்டது.

''பந்தயம் ஆரம்பிச்ச கொஞ்ச நேரத்திலேயே ஏதோ பூச்சி கடிச்ச மாதிரி இருந்தது. லேசா மயக்கம் வேற வந்தது. இருந்தாலும் கஷ்டப்பட்டு நடந்தேன்'' என்று அகல்யா



யார்? 5

அருண் சரண்யா

கூறியதும், ஆலிஸுக்கு ஒரே கோபம். ''உடனே போட்டியிலிருந்து விலகி இருக்கலாமே'' என்றாள்.

''அதெப்படி? என்னோட வலியைவிட நம்ம பாண்டூஸ் அணியின் கௌரவம் ரொம்ப முக்கியமானதாச்சே'' என்று பெருமையுடன் கூறிய அகல்யாவின் கண்களில் கண்ணீர் வழிந்தது. ''ஆனால் அப்படியும் என்னால முதலிலே வரமுடியல'' என்று விசும்பினாள்.

சரவணபெருமாள் அதட்டலாகப் பேசினான்: ''நீ முதலாவதாக வந்திருந்தால் நமக்குக் கிடைத்திருக்கக் கூடிய பெருமையை விட, இப்போது எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெருமைதான் அதிகம்'' என்றான்.

ராஜுவின் மனம் குற்ற உணர்ச்சியில் சுருண்டது. கடும் வலியையும் பொறுத்துக் கொண்டு பாண்டுஸின் கௌரவம் தான் பெரியது என நினைத்து செயல்பட்ட அகல்யாவையா என் மனம் துரோகி என கணக்குப் போட்டது! ''அகல்யா நீ மிக உயர்ந்தவள். எங்களுக்கு உன்னை நினைச்சு பெருமையாய் இருக்கு'' என்று கூறினான் ராஜு. அப்போது ஆலிஸின் கண்கள் கலங்குவதையும் அவன் கவனித்துவிட்டான். தன் சித்தி கூப்பிட்டபோது நால்வரையும் வேண்டுமென்றே நிறுத்திவிட்டு, தான் மட்டும் சென்று வந்ததை நினைத்து வேதனைப்படுகிறாளோ?

டாக்டர் வந்து பார்த்து காயம்பட்ட பகுதியைச் சுத்தம் செய்தார். மேலுக்கு ஒரு களிம்பைத் தடவினார். தன் வசமிருந்த சில மாத்திரைகளைக் கொடுத்தார். ''ஒண்ணுமில்லே கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கிட்டா சரியாயிடும்'' என்று கூறிவிட்டு அவர் கிளம்பிச் செல்ல மாணவர்களிடையே சிறிது நேரத்திற்குத் தொலைந்து போயிருந்த உற்சாகம் மீண்டும் தொற்றிக் கொண்டது.



அப்போது ஒரு விசில் சத்தம் கேட்டது. எல்லா மாணவர்களும் செல்வராஜ் சார் இருந்த திசையை நோக்கினார்கள். பிக்னிக் தொடக்கத்திலேயே சார் கூறியிருந்தார். ஏதாவது முக்கியச் செய்தியைச் சொல்ல வேண்டுமென்றால் அவர் விசிலடிப்பார். உடனே மாணவர்கள் தங்கள் பேச்சை நிறுத்திக் கொண்டு அவர் அருகே வந்துவிட வேண்டும். இப்போது அவர் என்ன சொல்

லப் போகிறார் என்ற ஆவலுடன் அவரை நெருங்கினார்கள். "இப்பவே மணி ஏழு ஆயிடுச்சு. ஒரு ரெண்டு மணி நேரத்துக்கு கேம்ப்ஃபயர் இருக்கும். அது முடிஞ்சதும் சாப்பிட்டுவிட்டு எல்லாரும் தூங்கிடுங்க. அப்பதான் காலை மூன்றரை மணிக்கே எழுந்து ட்ரெக்கிங் போக வசதியா இருக்கும்'' என்றார்.

கஜேந்திரன் என்ற சிறுவனுக்கு கேம்ப்ஃபயர், ட்ரெக்கிங் என்ற இரண்டு வார்த்தைகளுக்கும் அர்த்தம் புரியவில்லை. இதைப் புரிந்து கொண்ட ராஜு அவனுக்கு விளக்கினான்.

"பெரிய வெட்ட வெளியிலே நடுவே நெருப்பு மூட்டுவாங்க. இந்தக் குளிரான சூழலுக்கு வெதுவெதுப்பாக இருக்கும். ஒலி நாடா எல்லாம் கொண்டு வந்திருக்காங்க. பாட்டெல்லாம் போடுவாங்க. ஜாலியா இருக்கும். ட்ரெக்கிங்ன்னா இயற்கைச் சூழ்நிலையிலே வாக்கிங் போறது. மலைப் பகுதியிலே ட்ரெக்கிங் போறது ரொம்ப ரொம்ப நல்லாயிருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கேன். நாளைக்கு நான் கட்டாயம் கலந்துப்பேன்'' என்றான். "நீ கலந்துப்பே என்றால், உங்கள் ஐவரணியிலே இருக்கிற மீதிபேரும் கலந்துப்பாங்க என்றுதான் அர்த்தம்'' என்றான் கஜேந்திரன் புன்னகையுடன்.

ஆனால் அதே நேரம் அகல்யா "ஆலிஸ், எனக்கு டாக்டர் தூக்க மாத்திரையும் கொடுத்திருக்கார்ன்னு நினைக்கிறேன். அதை ராத்திரி சாப்பிட்டதுக்கப்புறம்தான் போட்டுக்கப் போறேன். காலையிலே என்னால சீக்கிரம் எழுந்திருக்க முடியுமான்னு தெரியல. அதனால் நான் இங்கேயே தங்கிக்கறேன். நீங்க எல்லாம் ட்ரெக்கிங் போயிட்டு வாங்க'' என்றாள்.


ஆலிஸுக்கு வருத்தம் ஏற்பட்டது. தோழியால் ட்ரெக்கிங் அனுபவத்தைப் பெற முடியவில்லையே என்ற கவலை. சட்டென ஒரு முடிவுக்கு வந்தாள். "உனக்குத் துணையா நானும் இங்கேயே தங்கிடறேன்'' என்றவள், அகல்யா அதை மறுத்துப் பேச முயற்சித்தவுடன் நிறுத்தினாள். அவள் முகத்தில் தெரிந்த உறுதியைப் பார்த்தவுடன், அகல்யாவின் பிடிவாதம் தளர்ந்தது.

கேம்ப்ஃபயர் நிகழ்ச்சி உற்சாகமாகத் தொடங்கியது. ஒலி நாடாவில் முதலில் மெலிதான மாண்டலின் இசை. அதைத் தொடர்ந்து நாதஸ்வரம் - தவில் கூட்டு இசையில் ஒலிபரப்பப்பட, மிக உற்சாகமான சூழல் களைகட்டியது. எல்லாருமே அந்தப் பகுதியில் கூடிவிட்டார்கள். ஒவ்வொருவரும் ஒரு ஜோக் அடித்தார்கள். அதற்கு நிஜமாகவே சிலர் சிரிக்க, "இதெல்லாம் ஒரு ஜோக்கா?'' என்றபடி மற்றவர்கள் சிரித்தார்கள். தன்னுடைய வலியை மறந்து அகல்யா கூட சிரித்தாள்.

மாணவர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்களைக் கூட அந்தச் சூழல் குழந்தைகளாக மாற்றிவிட்டிருந்தது. சேது சார் ஒரு பக்திப் பாடல் டியூனில், பிரபல சினிமா பாட்டு ஒன்றையும், பிரபல சினிமா பாட்டு டியூனில், ஒரு பக்திப் பாடலையும் பாடினார். அடுத்ததாக மேற்கத்திய இசைக்கேற்ப மரகதம் மிஸ் நடனமாடினார். மாணவர்கள் எல்லாம் இதை எதிர்பாராததால் மகிழ்ச்சிக் கூக்குரலிட்டார்கள். "இப்போது இதே மேற்கத்திய இசைக்கு அல்போன்ஸ் மேடம் பரதநாட்டியம் ஆடுவார்'' என்று மரகதம் மிஸ் அறிவிக்க, பலமான கைத்தட்டல்.

"ஐயோ மரகதம், என்னை இப்படி மாட்டி விட்டுட்டீங்களே? எனக்குப் பரதநாட்டியத்தின் அடிப்படைகூடத் தெரியாது'' என்றார். ஆனால் எல்லாரும் வற்புறுத்தவே "பரதநாட்டியம் தெரிஞ்ச ரெண்டுபேர் என்கூட

நூல் நிலையத்தை ஆங்கிலத்தில் லைப்ரரி என்கிறோம், லத்தீன் மொழிச் சொல்லான 'லைபெர்' என்ற சொல்லிலிருந்து 'லைப்ரரி' உருவானது.



ஆடணும்'' என்று நிபந்தனை விதித்தார். பத்மலதாவும் கீதப்ரியாவும் மூன்று வருடங்களாகப் பரதநாட்டியம் கற்றுக் கொள்பவர்கள். அவர்களும் அல்போன்ஸ் மிஸ்ஸுமாக அந்த இசைக்கு நாட்டியமாட, எல்லாருமே ரசித்தார்கள். அழகாக ஆடிய இரு மாணவிகளை விட, அல்போன்ஸ் மிஸ்ஸுக்குத்தான் அதிகப் பாராட்டு.

அடுத்து செல்வராஜ் சாரின் முறை. 'நான் மனோகரா சினிமாவின் கிளைமாக்ஸ் காட்சியை நடித்துக் காட்டப் போகிறேன்'' என்றார். ''பழைய படம் வேண்டாம் சார்'' என்று ஒரு மூலையிலிருந்து மாணவன் குரல்கொடுக்க, பல குரல்கள் அதை வழிமொழிந்தன. செல்வராஜ் சாருக்குக் கோபம் வரவில்லை. எப்போதுமே அவர் மாணவர்களுடன் சரிசமமாகப் பழகுபவர். இதனால் அவருக்கு ரொம்ப நல்ல பேர். ஆனால் இப்போது அவருக்குக் குழப்பமாக இருந்தது. ''எனக்குப் பழங்கால சினிமாக்களின் வசனம் தான் மனப்பாடம்'' என்றார்.

உடனே சரவணபெருமாள் எழுந்து துடுக்காக ''மூன்றாம் பிறையிலே ஸ்ரீதேவி குரங்காட்டியாட்டம் ஒரு குச்சிய வெச்சுட்டு மிரட்டுவாங்க, கமலஹாசன் குரங்கு மாதிரியே நல்லா ஆக்ட் பண்ணுவாரு. அதை நடிச்சிக் காமிங்க சார்'' என்றான். ''சார், இந்த பிக்னிக்கை சாக்கு வெச்சி பசங்க நம்மளை நல்லா ஏய்க்கிறாங்க'' என்றார் சுசீலா மிஸ்.

''பரவாயில்ல மேடம். இன்னும் ரெண்டு நாள்தானே?'' என்று கூறிய செல்வராஜ் சார், ''நான் கமலஹாசன் சரி, யாரு ஸ்ரீதேவியா வந்து என்னை ஆட்டி வைக்கப் போறது?'' என்று கேட்டார். எல்லாரும் சிரிப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்களே தவிர, ஸ்ரீதேவி செய்த பாத்திரத்தைச் செய்து காண்பிக்க யாரும் முன்வரவில்லை.

செல்வராஜ் சார், சரவணபெருமாளை கைநீட்டி அழைத்தார். ''நீதானே என்னை இந்தக் காட்சியை நடிக்கச் சொன்ன? அப்ப நீயே ஸ்ரீதேவியாக நடி'' என்றார்.

''வெளுத்துக் கட்டுடா'' என்று ராஜு தட்டிக் கொடுத்து அனுப்ப, பிற பாண்டுஸும் ''ஆல் தி பெஸ்ட்'' கூற, கீழே கிடந்த ஒரு மரக்குச்சியை எடுத்துக் கொண்டு சரவணபெருமாள் களத்தில் புகுந்தான்.

''ஆட்றா ராமா ஆட்றா'' என்று அவன்



குச்சியைக் கீழே தட்டியபடி கட்டளையிட, செல்வராஜ் சார் குட்டிக் கரணங்கள் அடித்தார். எல்லாரும் சிரித்தார்கள். பிறகு சரவண பெருமாள், சார் அருகில் சென்று ''இன்னொரு குட்டிக்கரணம் போடு ராமா'' என்றான். அவனை விளையாட்டாக முறைத்தபடி ''இருடா, பிக்னிக் முடிஞ்சதும் உன்னை ஒரு கை பார்க்கறேன்'' என்று சிரிப்புடன் கூறிவிட்டு, இன்னொரு குட்டிக்கரணம் அடித்தார். அப்போது அவர் கொஞ்சம் நிலை தடுமாறினார். அவர் சமாளித்துக் கொண்டுவிட்டார் என்றாலும், பல்டி அடிக்கும்போது அவரது கால் வேகமாக சரவண பெருமாளின் அருகில் வந்தது. அதிலிருந்து தப்பிக்க சரவண பெருமாள் வேகமாகத் திரும்ப, அவனது வலது காலில் சுளுக்குப் பிடித்துக் கொண்டது. அதை யாரிடமும் சொல்லாமல் மறைத்து விட்டான்.

மறுநாள் காலை வரை அந்தச் சுளுக்கு தொடரப் போகிறது என்றோ, பாண்டுஸில் ராஜுவும் பிரகாஷும் மட்டுமே ட்ரெக்கிங் செல்லும்படி நேரப் போகிறது என்றோ அங்கே நடக்கப் போகிற பயங்கரத்தைப் பற்றியோ, அவனுக்கு அப்போது தெரியாது.

(தொடரும்)







தண்ணீர்... தண்ணீர்...

தண்ணீர் இல்லாக் காட்டுக்குள்
தவித்தன மிருகங்கள் எல்லாமே
குடிக்கத் தண்ணீர் இல்லாமல்
குடமாய்க் கண்ணீர் விட்டனவே!

தவளைகள் சங்கம் சத்தமிட
முதலைகள் சேர்ந்து குரல் கொடுக்க
கவலையில் சிங்கம் காட்டினிலே
கண்ணீர் விட்டு சபை கூட்டும்!

குடிக்கத் தண்ணீர் கிடைக்கவில்லை.
குளிக்கும் குளத்தில் நீரில்லை!
கொடுக்கும் ஒரு குடம் போதவில்லை!
குரலும் கொடுத்தன மான், நரி, நாய்

யாகம் செய்து பார்த்தாலும்
மாற்றித் திருமணம் செய்தாலும்
மேகம் கூடி வரவில்லை
தாகம் தீர்க்கும் மழையில்லை!

அரசு டேங்கர் லாரியிலே
அமுத மலை நீர் வரவழைத்தார்
இரவும் பகலும் கிணற்றினிலே
இறைத்து யானை இளைத்ததுவே!

இடித்தன இடிகள் மின்னியதே
எங்கும் பெருமழை நீர்வெள்ளம்!
அடைத்தனர் காட்டினர் அணைக்கட்டில்
அனைவரும் சமமாய் பங்கிட்டார்.

– பாவை. பா.சா.பார்த்தசாரதி

குறுக்கெழுத்துப் புதிர்





கட்டங்களை நிரப்புங்கள்

இடமிருந்து வலம்:

1. உப்பு விளையும் இடம் (5)
10. இது பசித்தாலும் புல்லைத் தின்னாது (2)
11. விடுமுறை என்றால் சந்தோஷம்தானே? (2)
12. விருட்சம் என்பதை இப்படியும் அழைக்கலாம். (3)
13. கணை (2)

வலமிருந்து இடம்:


3. ஆடைகள் பல ______ கொண்டவை (2)
5. மோர்ஸ் கண்டுபிடித்த கருவி (3)
6. ______ அனைவரும் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை (2)
7. அனுமன் கையில் சஞ்சீவி ______யைத் தூக்கிச் சென்றார் (2)
16. ஒற்றைக் காலில் ஓயாமல் சுற்றுவான் (5)

மேலிருந்து கீழ்:

1. பூமி (4)
2. கனி (2)
3. உயிர்த் திரவம் (4)
6. கொக்கு போன்ற ஒரு பறவை (2)
9. பயிர்களைப் பாதுகாக்க இது அவசியம் (2)
10. பருப்புகளில் இந்தச் சத்து அதிகம் (4)

கீழிருந்து மேல்:

4. ஆகஸ்ட் 15 சுதந்திர ______ (3)
7. ஐ வகை நிலங்களுள் ஒன்று (4)
8. ஆடல், பாடல் என்பது ஒரு ______ (2)
11. துன்பத்திற்குக் காரணம் ______ என்று புத்தர் கூறினார் (2)
13. பெண் தெய்வங்களை இப்படியும் அழைக்கலாம் (4)
14. வெளியிடம் (3)
15. ______ களைக் கூண்டில் வளர்க்கக் கூடாது (3)
16. இதைக் கண்டதும் தண்ணீர் பாய்ந்து ஓடும் (4)



- சு. வரலக்ஷ்மி, ஐந்தாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சிக்கோட்டை.

விடை: 64ஆம் பக்கம்



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, பொது அறிவுப் போட்டி, அனுபவங்கள், துணுக்குகள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்குச் சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ______________________________

முகவரி : ______________________________

____

____

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை **'Gokulam Tamil'** என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
கல்கி பில்டிங்க்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

"பாரதி வருந்த மாட்டார்!"

பிரபலங்களின் வாழ்வில்...

கவிராஜன்...

ஒருமுறை பாரதியார் திருவனந்தபுரம் சென்றிருந்தபொழுது, அங்கிருந்த மிருகக் காட்சி சாலைக்குச் சென்றார். அங்குள்ள எல்லா மிருகங்களையும் கைகளால் தொட்டுப் பார்க்கத் தொடங்கினார். பக்கத்தில் இருந்தவர்கள் சொல்லியும் கேட்கவில்லை. சிங்கத்தையும் புலியையுமாவது தொட வேண்டாம் என்று காவற்காரன் கேட்டுக் கொண்டான். பாரதியார் அதையும் கேட்காமல் "நீ மிருக அரசன். நான் கவி அரசன். உன்னைக் காண வந்திருக்கிறேன். நீ உன் கர்ஜனை மூலம் உன் அன்பை எனக்குத் தெரியச் செய்" என்று சொல்லி, சிங்கத்தைத் தடவிக் கொடுத்தார். சிங்கமும் மகிழ்ந்து கர்ஜனை செய்து தன் அன்பை வெளிப்படுத்தியது. அருகில் இருந்தவர்கள் வியந்து நின்றனர்.



• நாமக்கல் கவிஞர்

- எஸ். சண்முகராஜ்,
சென்னை.

இந்தியனாக...

சர்தார் வல்லபாய் படேல் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவர் இருந்த இருக்கைக்குப் பக்கத்தில் ஓர் ஆங்கிலேயரும், ஒரு ஃபிரெஞ்சுக்காரரும் பயணம் செய்து கொண்டு இருந்தனர். அவர்கள் இருவரும் சேர்ந்து படேலை மட்டம் தட்ட விரும்பினார்கள்.

ஆங்கிலேயர், "ஒருவேளை நான் ஆங்கிலேயனாகப் பிறந்து இருக்காவிட்டால் ஃபிரெஞ்சுக்காரனாகப் பிறந்திருப்பேன்" என்றார். அதைக் கேட்ட, ஃபிரெஞ்சுக்காரர், "நான், ஃபிரெஞ்சுக்காரனாகப் பிறந்திருக்காவிட்டால் நிச்சயம் ஆங்கிலேயனாகத்தான் பிறந்திருப்பேன்" என்றார். இதைக் கேட்ட படேல் மெல்லப் புன்னகைத்தவாறே "ஒருவேளை நான் இந்தியனாகப் பிறந்திருக்காவிட்டால், அதற்காக வெட்கித் தலைகுனிந்திருப்பேன்" என்றார்.

அதைக் கேட்ட அவர்கள் இருவரும் வாயடைத்துப் போனார்கள். படேலின் தேச



• பாரதியார்



• படேல்

பக்தியைக் கண்டு வியந்து பாராட்டினர்.

கவிஞர் ஆவுடையார் கோவிலுக்குக் கட்டை வண்டியில் போய்க் கொண்டிருந்தார். பக்கத்தில் இருந்த ஒரு நண்பர், கவிஞருடைய பாடல்களை வெகு உரத்த குரலில் பாட ஆரம்பித்தார். உடனே கவிஞர், "தயவு செய்து பாரதியார் பாடல்களில் ஏதாவது பாடுங்களேன்!" என்று சொன்னார்.

"தங்கள் பாட்டுகளை விடப் பாரதியார் பாடல்கள் மீது தங்களுக்கு ஏன் இத்தனை மோகம்?" என்று கேட்டார் நண்பர்.

அதற்குக் கவிஞர், "மோகம் என்பதற்காகச் சொல்லவில்லை. பாரதியார் இறந்து விட்டார். அவர் பாடல்களை எப்படி கொலை பண்ணினாலும் அவர் வருந்தப் போவதில்லை. அதற்காகத்தான் சொன்னேன்!" என்றார்.

சொற்பொழிவு...

ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள் மிகுந்த கூச்ச சுபாவம் மிக்கவர்கள். மேடையில் பேசுவதென்றால் மிகவும் தயங்குவார்கள்.

ஒருமுறை ரைட் சகோதரர்கள் ஒரு விருந்தில் கலந்து கொண்டனர். அப்போது மேடையில் பேசுவதற்கு மூத்தவரான வில்பர் ரைட்டை அழைத்தார்கள். வில்பர் ரைட்டிற்குத் தர்மசங்கடமாகப் போய் விட்டது. தன் இருக்கையிலிருந்து எழுந்து மேடைக்குச் சென்ற வில்பர், "எப்போதும் என் தம்பி ஆர்வில்தான் பேசுவது வழக்கம்" என்று கூறிவிட்டு இறங்கினார்.

அடுத்துப் பேசுவதற்கு இளையவரான ஆர்வில்லை அழைத்தபோது, "என்னுடைய அண்ணன்தான் ஏற்கெனவே சொற்பொழிவு செய்து விட்டாரே. நான் வேறு எதற்கு...?" என்று கூறிவிட்டு மேடையிலிருந்து இறங்கினார்!

- ஆர். பிரசன்னா, கரூர்.

மகிழ்ச்சி...

தொலைநோக்கியைக் கண்டுபிடித்த கலீலியோ தன் கடைசிக் காலத்தில் ஓய்வு இல்லாமல் உழைத்தார். வான மண்டலத்தின் இரகசியங்களையெல்லாம் கண்டறிந்து உலகிற்குச் சொன்ன கலீலியோ, 1637 ஆம் ஆண்டு கண் பார்வை இழந்து, குருடர் ஆனார். தமது நிலையை விளக்கித் தன் நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதினார்.

'நான் நிவர்த்தி செய்ய முடியாதபடி முழுக் குருடனாகி விட்டேன். வானத்தையும், பூமியையும், அண்டத்தையும் அதில் உள்ள அழகையும் மக்களுக்கு விரிவுபடுத்திக் காட்டிய நான் இப்போது பார்வை இழந்துவிட்டபடியால் அவை யாவும் சுருங்கி சிறுத்து நான் இருக்கும் இடத்துக்குள்ளேயே அடங்கிப் போய் விட்டன. இயற்கையின் சித்தம் அதுவானால் அதுவே எனக்கு மகிழ்ச்சி தரக் கூடியதாகும்.'

- என். ஜரினா பானு, திருப்பட்டினம்.

• கலீலியோ



பாடல்

நாமக்கல்

1000/- ரூபாய் பரிசு!




இந்த மாதப் போட்டி

மாதம்தோறும் நடத்தப்படும் இந்தப் போட்டி உங்களுக்கு மிகவும் பிடிக்கும் அல்லவா? இந்தப் போட்டியில் பங்கேற்பது மிகவும் சுலபம். சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுத வேண்டும். பெற்றோர் கையொப்பம் கண்டிப்பாக இருக்க வேண்டும். முகவரி கூப்பனை ஒட்டி உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ. 200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி: 20.02.2004.



சீனா

1. தலை நகரம் ________
2. முக்கிய நகரங்கள் ________, ________
3. மொழிகள் ________, ________
4. கரன்ஸி ________
6. அதிகம் விளையும் பயிர்கள் ________, ________

7.  இது எந்த நாட்டுக் கொடி?

ஆசிரியர்,
கோகுலம்,
கல்கி
பில்டிங்க்ஸ்,
47-NP,
ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097



ஒற்றைக் கால் நாராயணன் ஓடையிலே மீன் பிடிக்கிறான்!



விடுகதைப் பக்கம்

I. 1. மண்ணின் மீது நடப்பேன், சத்தம் போட்டுச் சிரிப்பேன், சங்கீதமாய் இசைப்பேன் - நான் யார்?

2. அடைமழை பெய்த அடுத்த நாள் படைபடையாய் வந்ததாம் - பறங்கி நாட்டு விமானம். எதிரி எதிர்த்துச் சுடாமலே சிற கொடிந்து செத்ததாம் - அது என்ன?

3. காற்றில் கரையாது, ஆனால் தண்ணீரில் கரைந்துவிடும் - அது என்ன?

4. கண் உள்ளவனுக்குக் காத தூரம் வால் - அது என்ன?

- இரா. ராஜேஸ்வரி,
ஒன்பதாம் வகுப்பு, உமா மகளிர் உயர்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

II. 1. ஒற்றைக்கால் நாராயணன் ஓடையிலே மீன் பிடிக்கிறான் - அவன் யார்?

2. மரத்தில் தொங்கும் பொட்டலம், காவல் நிறைந்த பொட்டலம் - என்ன பொட்டலம்?

3. பல நாள் காய்ந்து ஒரு நாள் பழுக்கும் - அது என்ன?

4. வெள்ளை வெள்ளை சீமாட்டிக்கு விளக்கு எரியுது தலைக்கு மேலே - அது என்ன?

- பி. கோவிந்தசாமி,
ஊத்தங்கரை

III. 1. காகித கருவூலத்தினுள் அடுக்கடுக்காய் தங்கக் கட்டிகள் - அது என்ன?

2. மணமில்லாத பூ, மனதை மகிழ்வூட்டும் பூ - அது என்ன?

3. அண்ணன் வீட்டிலே பொந்து, பொந்துக்குள்ளே பந்து, பந்துக்குள்ளே ஐந்து - அது என்ன?

4. சில்லெனச் சிந்தும் வெள்ளை மணி, இது விவசாயிகளின் கண்ணின் மணி - அது என்ன?

- எஸ். பிரபு, தேனி

IV. 1. ஒரு புட்டியில் இரண்டு தைலம் - அது என்ன?

2. வெண்கலக் கோட்டைக்குள் மங்களத் தங்கம் மஞ்சள் நிறத்தில் - அது என்ன?

3. வெள்ளைக் கோட்டைக்குள் தங்க ராஜ்யம் - அது என்ன?

4. உடைக்குள்ளே புகுந்து படைகளையும் நடுங்க வைப்பான்; உதித்தோடி, கதிரவன் உலகத்தில் வரும்போது குதித்தோடி அவனுமே குவலயத்தில் ஒடுங்கிடுவான் - அவன் யார்?

- ஆர்.ஜி. விநாயகா, மணலிவிளை,
திருநெல்வேலி

விடைகள் :

I. 1. அருவி, 2. ஈசல், 3. உப்பு, 4. ஊசி நூல்.
II. 1. கொக்கு, 2. தேன்கூடு, 3. மண் சட்டி, 4. மெழுகுவர்த்தி.
III. 1. மக்காச்சோளக் கதிர், 2. மத்தாப்பூ, 3. பல்லி முட்டை, 4. மழை நீர்
IV. 1, 2, 3. முட்டை, 4. குளிர்

உண்டு ருசி, கண்டு ருசி!


■ மாலதி ■

விநோதபுரி அரசன் திறமைசாலிகளை ஆதரித்து வந்தான். ஒரு நாள் மூவர் அவனிடம் வேலை கேட்டு வந்தனர்.

அரசன் முதலாமவனிடம் ''உன் திறமை என்ன?'' என்று கேட்டான். அவன் ''அரசே, உணவில் உள்ள குற்றங்களைக் கண்டு பிடிப்பேன். அதனால் ஊரார் என்னை 'உண்டு ருசி' என அழைக்கின்றனர்'' என்றான். அரசன் உடனே அவனுக்குத் தனக்கு வைத்திருந்த அறுசுவை உணவைத் தலை வாழையிலையிட்டுப் பரிமாறச் சொன்னார்.

சாப்பிட்டு முடித்ததும் ''திருப்தியாகச் சாப்பிட்டாயா? இதில் குறையேதும் கண்டாயா?'' என்று கேட்டார்.

''வயிறு நிரம்பச் சாப்பிட்டேன். ஆனால் சோற்றில் சுடுகாட்டு வாசனை வீசுகிறது'' என்று பணிவோடு கூறினான். விசாரித்ததில் அந்த அரிசி விளைந்த வயலுக்கு



அருகில் சுடுகாடு இருப்பது தெரியவந்தது.

ஒரு நாள் வேற்று நாட்டு தூதன் ஒருவன் அரசரைக் காண வந்திருந்தான். அவனோடு பேச்சு வார்த்தை நடத்தும்போது, இரண்டாவது திறமைசாலியான கண்டு ருசியையும் கூடவே இருக்க வைத்தார் வேந்தர்.

பேச்சுவார்த்தை முடிந்த பிறகு அவனைப் பற்றிக் கேட்டார். ''மன்னா! இவன் துஷ்டன். இவன் கொண்டு வந்தது பொய்யான தகவல். தற்போது பீஜப்பூர்மீது படையெடுத்தால் வெற்றி நிச்சயம். அவர்களிடம் போதிய படை பலம் இல்லாததால், சமாதானப் பேச்சுக்கு அடி போடுகிறான்'' என்றான் கண்டு ருசி.

''உங்களிடம் பேசும்போது தூதனுக்கு உள்ளங்கை வியர்த்து அடிக்கடி துடைத்துக் கொண்டான். பொய் பேசும் போதுதான் அப்படி வியர்க்கும். எனவே அவன் சொல்வது பொய்'' என்றான் கண்டு ருசி.

சில தினங்களில் ஒற்றர்கள் கொண்டு வந்த செய்தியும் அதுவாகவே இருந்தது. போருக்குச் சென்ற மன்னன் எளிதில் வெற்றி பெற்றான்.

கண்டு ருசியைத் தன் மெய்க்காப்பாளனாக்கிக் கொண்டான் அரசன். அரண்மனையில் அரசரிடம் எத்தனை கோபமிருந்தாலும் தவறாக நினைக்கவே பயந்தனர்.

மூன்றாமவனிடம், ''உன்னிடமுள்ள விசேஷ சக்தி என்ன?'' என்று விசாரித்தார் அரசர்.

''அரசே! என் பெயர் சயனருசி. படுக்கையில் என்ன கோளாறு இருந்தாலும் சொல்லி விடுவேன்'' என்றான்.

அரசர் தன் படுக்கையைக் காட்டினார். அதில் சில விநாடிகள் முகத்தைத் தேய்த்தவன், ''அடியில் விரித்திருக்கும் பாயின் மேல் விஷ மல்லிகை தூவப்பட்டிருக்கிறது. அது சிறிது சிறிதாக உங்களை நோய்ப் படுக்கையில் தள்ளும்'' என்றான்.

மன்னர் உடனே வைத்தியரை அழைத்து ஆராயச் சொன்னார். அவரும் பாயின் மேலுள்ள மல்லிகையை முகர்ந்து ''சயனருசி சொன்னது மெய்!'' என்றுரைத்தார்.

அரசர் அன்று படுக்கை விரித்தவனை, மலர் தூவியவனை, விற்றவனை என்று விசாரிக்க, உண்மை வெளி வந்தது. இனி தனக்குச் சயன ருசியே படுக்கை தயாரிக்க வேண்டுமென உத்தரவிட்டார்.

மூவரும் மகிழ்ச்சியோடு அரண்மனையில் விசுவாசமாக உழைத்தனர்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை



1 உ	ப்	2 ப	ள	ம்	■	ம்	க	3 ர
ல	■	ழ	■	த	■	ள	■	த்
க	■	ம்	■	ரு	■	4 தி	ந்	5 த
ம்	6 நா	■	லை	7 ம	■	■	■	ம்
■	ரை	■	8 க	■	9 வே	■	சை	■
ன்	■	■	■	10 பு	லி	■	11 ஆ	ம்
12 ம	ர	ம்	■	ர	■	சி	■	ள
ம்	■	ற	■	த	■	ட்	■	ள்
13 அ	ம்	14 பு	■	ம்	ர	15 ப	ம்	16 ப



ஆந்தைக்குப் பகலில் கண் தெரியுமா?

அன்புள்ள ஜக்கு...



* ஆர். வளர்மதி, குற்றாலம்.

? ஆந்தைக்குப் பகலில் கண் தெரியுமா ஜக்கு?

ஆந்தைக்குப் பகலில் கண்ணே தெரியாது என்று சொல்ல முடியாது வளர்மதி. ஆந்தை இரவில் மட்டுமே உணவைத் தேடும் இயல்பைக் கொண்டது. இதனால் ஆந்தையின் கண்களில், விழித்திரையில் குச்சி செல்கள் (rods) தான் அதிக எண்ணிக்கையில் உள்ளன. குச்சி செல்கள் மங்கலான ஒளியில் செயல்படக் கூடியவை. இதன் மூலம் ஆந்தை மங்கலான வெளிச்சத்தில் எளிதாகப் பார்க்கிறது. இதன் விழித்திரையில் cones என்ற கூம்பு செல்கள் மிகவும் குறைவு. கூம்பு செல்கள்தான் பிரகாசமான ஒளிக்கதிர்களை வாங்கும் செல்கள். எனவேதான் ஆந்தைக்குப் பகலில் கண் நன்றாகத் தெரிவதில்லை.

* கே. கார்த்திக்குமார், பல்லடம்.


? தியேட்டரில் சினிமா பார்க்கும் போது, திரையில் விழும் பிம்பத்தை போட்டோ எடுக்க முடியுமா ஜக்கு?

திரையில் விழும் பிம்பத்தை போட்டோ எடுக்க முடியும் கார்த்திக். ஆனால் அது தெளிவாக இருக்காது. திரைப்படம் ஓடும்போது வினாடிக்கு 8 படங்கள் வீதம் திரையில் விழுகின்றன. இவ்வாறு விழுவதால் கண்ணுக்குப் படங்கள் தனித்தனியாகத் தெரியாமல் அவை தொடர்ந்து நிகழ்வது போல் தோன்றுகின்றன. போட்டோ எடுக்கும் போது பதிவு செய்யும் நேர இடைவெளியில் படங்கள் அடுத்தடுத்து ஒன்றன் மீது ஒன்றாகப் பதிவாகி விடும். சினிமாவில் இந்தக் காட்சி நிலையாக இருந்தால் அது காமிராவில் தெளிவாக விழும். பாடல், சண்டைக் காட்சிகள் போல் வேகமான நிகழ்வாக இருந்தால் தெளிவற்று விழுந்திருக்கும்.

* எம். வினோத், சங்கரன் கோவில்.

? ஜக்கு, நீ பேருந்தில் பயப்படாமல் ஃபுட்போர்டில் பயணம் செய்வாயா?

என்ன வினோத், ஜக்குவைப் பார்த்து இப்படி ஒரு கேள்வியா? படியில் பயணம் செய்வது மிகவும் ஆபத்தான விஷயம். அது தவிர சக பயணிகளுக்கும் சிரமத்தைக் கொடுக்கும். 'படியில் பயணம் நொடியில் மரணம்' என்ற வாசகத்தைப் படித்தும் படியில் பயணம் செய்யலாமா? வினோத் என் நண்பன் என்றால், இப்பழக்கத்தை உடனே விட்டுவீர்கள் என நம்புகிறேன்.



எங்கள் எண்ணங்கள்...

யானைகளுக்கு ஓய்வு அவசியம்!

யானைகளைக் காட்டுக்கு அனுப்புவது தவறு. காட்டிற்கு அழைத்து சென்று அவற்றிற்குக் கொடுக்கும் மருத்துவ வசதிகளை அவை இருக்கும் இடத்திலேயே கொடுத்து விடலாம். லாரியில் அவை ஏறி, பின் இறங்க சிரமப்பட்டதை நான் நேரில் பார்த்தபோது மனதுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. ஓய்வு முடிந்து திரும்பிய பின்பும், அவை பழைய சூழலுக்குத் திரும்பவும், அவற்றின் அலுப்புத் தீரவும், சில வாரங்கள் ஆயின. அதற்காகக் கோயில் யானையைக் காட்டிலேயே விட்டாலும் அவை தன் உணவைத் தானே தேடிக் கொள்ள இயலாது; சீக்கிரம் இறந்து விடும். 'யாரும் இருக்கும் இடத்தில் இருந்து விட்டால் எல்லாம் சௌக்கியமே' என்ற வாக்கு யானைக்கும் பொருந்தும், என்பது திண்ணம்.


- சே. நம்பிகிருஷ்ணன்,
ஒன்பதாம் வகுப்பு, டி.வி.எஸ். அரசினர்
மேல்நிலைப் பள்ளி,
திருக்குறுங்குடி.

யானைகளைக் காட்டுக்கு அனுப்புவது என்ற பேச்சுக்கே இடமில்லை. யானைகளைக் காட்டுக்கு அனுப்புவதென்று முடிவெடுத்தால், நாம் காட்டிலிருந்து கொண்டு வந்து வீட்டு மிருகங்களாக வளர்க்கும் மாடு, எருமை, குதிரை, ஆடு, பன்றி, மான், முயல் இன்ன பிற மிருகங்களையும் காட்டுக்கு அனுப்பத்தானே வேண்டும்? அது சாத்தியமா என்பதை முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும். யானைகளைக் காட்டிலிருந்து பிடித்து வந்து ஆன்மிகத்திற்காக கோயில்களிலும், மரக் கிடங்குகளில் பெரிய பெரிய மரங்களைத் தூக்கவும், அப்புறப்படுத்தவும், இன்னும் பல கடின வேலைகளுக்காகவும் பயன்படுத்துகின்றனர். ஆனால் மனிதரிலிருந்து உழைக்கின்ற ஒவ்வொரு ஜீவராசிக்கும் பொதுவாகவே ஓய்வு தேவை. இதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே யானைகளாயினும் அதற்கும் ஓய்வு தேவையே. அப்படி ஓய்வு எடுக்க யானைகளுக்கு ஏற்ற இடம் பரந்து விரிந்து கிடக்கும் பசுமையுடன் கூடிய காடுகளே. அங்குதான் அவை தாங்கள் விரும்பியபடி தங்கள் இனமற்ற யானைகளுடன் அளவளாவி மகிழ்ந்து மனசை ரிலாக்ஸ் செய்து கொள்ள முடியும். எனவே யானைகளுக்கு ஓய்வு தேவை என்பதுதான் சரி.

- வி. தேவி ஊ.ஒ.து.பள்ளி,
பெரிய நொச்சியூர், சேலம்

பெற்றோர், உற்றார் சுற்றம் சூழ வாழும் மனிதன் தன் ஆயுள் முழுவதும் இவர்கள் அனைவரும் தன்னைச் சுற்றி இருப்பதையே விரும்புகிறான். தன் இனம் சூழ வாழ விரும்புதல் மண்ணுயிர்களின் பொதுக் குணம். இதன்படி காட்டில் பிறந்த யானை தன் இனத்துடன் காட்டில் வாழ்ந்து, காட்டிலேயே மறைவதுதான் சரி. எனவே யானைகளைக் காட்டுக்கு அனுப்புவதே நல்லது.

- மு. அகமது ஆதில்,
ஒன்பதாம் வகுப்பு,
தூய அருளின்பர் உயர்நிலைப் பள்ளி,
பள்ளங்கோயில்



சுவாரசியமான தொடர்!



விளையாட்டு உலகம்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே நடைபெற்ற டெஸ்ட் தொடர் டிராவில் முடிந்தாலும் சுவாரசியத்துக்குப் பஞ்சமில்லை. நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றன. இரண்டு போட்டிகள் டிராவில் முடிந்தன. எனவே 1:1 என்ற கணக்கில் தொடர் டிராவில் முடிந்தது. தொடர் டிராவில் முடிந்தாலும் 2001ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றியதால் கோப்பை இந்தியாவுக்கு வழங்கப்பட்டது.

ஆஸ்திரேலிய டெஸ்ட் போட்டி கேப்டன் ஸ்டீவ் வாஹ் இத்தொடருடன் ஓய்வு பெற்று விட்டார். இறுதி நாள் போட்டியில் 80 ரன்களைக் குவித்து போட்டியை டிராவுக்குக் கொண்டு வந்தார் ஸ்டீவ்.

இந்தத் தொடரில் மூன்று போட்டிகளில் சரியாக விளையாடாத சச்சின் டெண்டுல்கர் இறுதிப் போட்டியில் பிரமாதப்படுத்தினார். முதல் இன்னிங்ஸில் 241 ரன்களைக் குவித்து இந்திய அணியின் ஸ்கோர் 705 எட்ட பெரிதும் உதவினார். இரண்டாவது இன்னிங்ஸில் 60 ரன்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்தத் தொடர் முழுவதும் சிறப்பாக விளையாடியவர் ராகுல் திராவிட். அவரின் நிதானமான ஆட்டம் இந்திய அணிக்குப் பெரிய பலமாக அமைந்தது.



•ஸ்டீவ் வாஹ்

தொடர் நாயகன் விருது திராவிட்க்கு வழங்கப்பட்டது.

அனில் கும்ப்ளேயின் பந்து வீச்சு சிறப்பாக அமைந்தது. இறுதிப் போட்டியில் முதல்



•டிராவிட்

இன்னிங்ஸில் 8 விக்கெட்களைச் சாய்த்தார் கும்ப்ளே. இந்தப் போட்டியில் 88.5 ஓவர்களை கும்ப்ளே வீசியிருக்கிறார். இதுவே அன்னிய மண்ணில் ஒரு போட்டியில் கும்ப்ளே வீசிய அதிகபட்ச ஓவர்கள்.


இந்தத் தொடர் வீரர்கள் பல சாதனைகளை நிகழ்த்தவும், ரசிகர்களை மனநிறைவடையச் செய்யவும் உதவியிருக்கிறது.



•சச்சின்




•கும்ப்ளே




முதல் பரிசு:
ஆர். பெருமாள்,
பதினோராம் வகுப்பு, நீலாம்பாள்
சுப்ரமணியம் மேல் நிலைப் பள்ளி,
சூரமங்கலம், சேலம்

மீனம்மா... மீனம்மா...



இரண்டாம் பரிசு:
எஸ். புவனேஸ்வரி,
கே.கே.புதூர்,
கோவை.




வண்ணத் தூரிகை முடிவு

ஜனவரி இதழில் மீன்கள் என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். நீந்தி வந்து சேர்ந்த மீன்களில் பரிசு பெற்ற மீன்கள் இங்கே...

மூன்றாம் பரிசு:

தா.ஆ. அருண்ராஜ்,
பன்னிரண்டாம் வகுப்பு, செ.ம.
மேல்நிலைப் பள்ளி, தாரமங்கலம்






ஆறுதல் பரிசு:

எம். குமார்,
எட்டாம் வகுப்பு,
டி.ஏ.வி.பெல் பள்ளி, ராணிப்பேட்டை.




ஆறுதல் பரிசு:

அ. அவினாஷ்,
இரண்டாம் வகுப்பு,
அண்ணா ஜெம் சயன்ஸ் பார்க் பள்ளி,
சென்னை.



சிவப்பைக் கண்டு காளை மிரளுமா?

நெட் பிட்ஸ்



முதலில், பொது அறிவு சம்பந்தப்பட்ட சில கேள்விகளுக்குப் பதில்களைத் தெரிந்து கொள்ளலாம்.

செஸ் விளையாட்டில் பயன்படுத்தப்படும் 'செக்-மேட்' என்ற வார்த்தை எப்படி வந்தது?

பாரசீக மொழியில் 'ஷா மேட்' என்ற வார்த்தைக்கு மன்னன் மரணம் அடைந்து விட்டதாகப் பொருள். செஸ் ஆடுகிற போது, இனி 'ராஜா'வை நகர்த்த முடியாது. ராஜா வெட்டிச் சாய்க்கப்பட்டுவிட்டார், ஆட்டம் முடிந்தது, என்பதைக் குறிக்கிற செக்-மேட் என்ற வார்த்தை ஷா மேட் என்ற பாரசீக வார்த்தையிலிருந்து வந்தது.

சிவப்பு நிறம், காளை மாடுகளை கோபப் படுத்துமா?

காளை மாட்டுடன் சண்டை போடும் 'புல் ஃபைட்டர்கள்' சிவப்பு நிற உடையணிந்து, கையில் சிவப்புத்துணிகளை அசைத்து, காளைகளைச் சண்டைக்கு முன் கோப மூட்டுவது மரபாக இருக்கிறது. ஆனால், ஒரு விஷயம் தெரியுமா? மாடுகளுக்கு வண்ணங் களைப் பிரித்து, அறியும் குணம் கிடையாது. சிவப்புத்துணி, சிவப்பு உடைக்குப் பதிலாக நீலமோ, பச்சையோ, வெள்ளையோ பயன் படுத்தினாலும், காளை சீறவே செய்யும். இதுதான் உண்மை.

ஒரு புதிர்: எட்டு தடவை 8 என்ற எண்ணைப் பயன்படுத்தி ஆயிரம் வரும்படிச் செய்ய வேண்டும்.

இந்திய ரயில்வே, உலக ரயில்வே சரித் திரத்தில் மிக முக்கிய மான ஒன்று. ரயில்வேக்கு என்று நிறைய இணைய தளங்கள் இருக் கின்றன. அவற்றில் இந்திய ரயில்வேக்கள் குறித்து ஏராளமான சுவாரசியமான தகவல்கள் கிடைக்கின்றன. சில தகவல்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

- நம்நாட்டில், மிக அதிக தூரம் பயணம் செய்யும் ரயில் எது தெரியுமா? ஜம்முதாவிக் கும் கன்யாகுமரிக்கும் இடையே ஓடும் ஹிம் சாகர் எக்ஸ்பிரஸ்தான். இதன் பயண தூரம் 3751கி.மீ. இதன் பயண நேரம், காலதாமத மின்றி ஓடினாலே சுமார் 75 மணி நேரம். அதாவது மூன்று நாட்களுக்கும் அதிகம்.




இந்த ரயில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், டெல்லி, ராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர் என்று இத்தனை மாநிலங்கள் வழியாகப் பயணம் செய்கிறது.

● மிகக் குறைந்த தூரம் பயணம் செய்யும் ரயில் எது தெரியுமா? நாக்பூருக்கும், அஜ்னிக்கும் இடையில் தினசரி செல்கிற ரயில்தான். இதன் பயண தூரம் வெறும் மூன்று கி.மீ.தான். நாக்பூரிலிருந்து, அஜ்னியில் இருக்கும் ரயில்வே ஒர்க் ஷாப்பில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காக இந்த ரயில் விடப்படுகிறது. பயண நேரம் சுமார் 20 நிமிடங்கள்.

● இந்தியாவிலேயே மிகவும் பிஸியான ரயில்வே ஸ்டேஷன் என்று உ.பி. மாநிலத்தில் லக்னோ ரயில்வே ஸ்டேஷனைக் குறிப்பிடலாம். தினசரி இந்த ஸ்டேஷன் வழியாக 64 ரயில்கள் வந்து செல்கின்றன. இதற்கு அடுத்த இடம் டெல்லி ஸ்டேஷனுக்கு. அங்கே தினசரி 60 ரயில்கள் என்கிறது புள்ளி விவரம்.

● கால தாமதத்துக்குப் பெயர்போன ரயில் ஒன்று இருக்கிறது. அதுதான் கௌஹாத்தி - திருவனந்தபுரம் இடையில் ஓடும் கௌஹாத்தி எக்ஸ்பிரஸ். அனுமதிக்கப்பட்ட பயண நேரம் எழுபத்தி ஒண்ணரை மணி நேரம் என்றாலும், சராசரியாக இருபது மணி நேரம் லேட் என்பது இதன் வரலாறு. 1995ல் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையில் ரயில்வேக்கள் பற்றிய ஒரு கட்டுரையில், இந்த ரயில் ஓடத் தொடங்கிய நாளிலிருந்து, ஒருநாள் கூட சரியான நேரத்துக்குப் போய்ச் சேர்ந்ததில்லை என்று குறிப்பிட்டிருந்தனர்.



தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**

புதிருக்கு விடை:
888 + 88 + 8 + 8 + 8 = 1000

"உனக்குக் கண்ணை மூடிக்கிட்டே எழுதத் தெரியுமா அப்பா?"

"ஓ! தெரியுமே! என்ன எழுதணும்?"

"வேற ஒண்ணுமில்லை! நான் உன் முன்னால என் பிராக்கிரஸ் ரிப்போர்ட்டை வைக்கிறேன். அதுல நீ கண்ணை மூடிக்கிட்டே உன் கையெழுத்தைப் போட்டால் போதும்."

முதல் நாள் பள்ளிக்கூடம் சென்றாள் ஒரு சிறுமி. வீடு திரும்பியவுடன், ''இனிமேல் நான் ஸ்கூலுக்குப் போக மாட்டேன்'' என்றாள்.

காரணம் கேட்டார் அப்பா.

சிறுமி சொன்னாள்: ''எனக்கோ எழுதவும், படிக்கவும் தெரியாது. அதை அங்கே செய்யச் சொல்கிறார் டீச்சர். எனக்குப் பேசத் தெரியும், ஆனால் டீச்சரோ பேசக் கூடாது என்கிறார்!''



மனுவுக்குப் பரிசு

மனுவுக்கு இசையில் மிகவும் ஆர்வம். அவன் வாய் எப்பொழுதும் ஏதாவது ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டோ... பாடிக்கொண்டோ இருக்கும்.

சங்கீத ஞானம் கொண்ட ஓர் ஆசானிடம் முறையாகச் சங்கீதம் கற்றுக் கொள்ள விரும்பினான். பக்கத்து நகரத்தில் இருக்கும் சக்ரவர்த்தி என்பவர் பாட்டு கற்றுக் கொடுப்பதாகத் தெரிந்து கொண்டான். மறுநாளே நகரத்திற்குச் சென்று சங்கீத வித்வான் சக்ரவர்த்தியை அவரது பெரிய இல்லத்தில் சந்தித்தான். மனு கூறியவற்றைப் பொறுமையாகக் கேட்ட சக்ரவர்த்தி, "உனக்குப் பாட்டு சொல்லித் தருவதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. குரு தட்சிணையாகப் பத்து பொற்காசுகள் கொடுத்து விட்டுத்தான் வகுப்பிற்கு வரவேண்டும்" என்று திட்டவட்டமாகக் கூறி விட்டார். பெற்றோரை இழந்து வயதான பாட்டியின் ஆதரவில் வாழ்ந்து வரும் மனு, பத்துப் பொற்காசுகளுக்கு எங்கே போவான்?

ஏமாற்றத்தோடும், வருத்தத்தோடும் திரும்பிக் கொண்டிருந்த அவன் தன்னை யாரோ அழைப்பதைக் கேட்டுத் திரும்பினான்.


அங்கே பாடகர் சக்ரவர்த்தியின் மனைவி அருந்ததி நின்றிருந்தார்.

"மனு! நீ இத்தனை நேரம் என் கணவரிடம் பேசிக் கொண்டிருந்ததை எல்லாம் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன். உண்மையிலேயே உனக்கு இசையில் ஆர்வம் அதிகம் இருப்பதை உணர்ந்து கொண்டேன். நான் சொல்கிறபடி நீ நடந்து கொண்டால், நீ பாட்டைக் கற்றுக் கொள்ளலாம்" என்றார்.

"அம்மா! தாங்கள் என்ன சொன்னாலும் கேட்கத் தயாராக இருக்கிறேன்" என்றான் பணிவோடு மனு.

"என் கணவர் பாட்டு சொல்லிக் கொடுக்கும்போது இடத்தை விட்டு அசைய மாட்டார். எங்கள் வீட்டுக் கூடத்தில் அமர்ந்து கொண்டு தான் பாட்டு சொல்லிக் கொடுப்பார். நீ பக்கத்து அறைக்குள் அமர்ந்து கற்றுக் கொள். தெரிகிறதா? இந்த விஷயம் உன்னையும் என்னையும் தவிர வேறு யாருக்கும் தெரிய வேண்டாம்..."

"இந்த ஏழை மீது தாங்கள் காட்டும்




பரிவுக்கு நன்றி அம்மா" என்று வணங்கினான்.

அருந்ததி சொல்லியிருந்தபடி மறுநாள்

கிடைக்குமா?

■ த.ஜானகி ■

விடியற்காலையிலேயே எழுந்து வேகமாக ஐந்து மைல் தூரத்தைக் கடந்து சக்ரவர்த்தியின் வீட்டின் பின் பக்கம் தயாராக நின்று கொண்டான். பாட்டு கற்றுக் கொள்ள பத்துப் பேர் வந்திருந்தனர். அவர்கள் கூடத்தில் அமர்ந்து கொண்டதும் குரு தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். மனுவும் கூடத்தை ஒட்டி உள்ள அறையில் அமர்ந்து கொண்டு பாட்டு சொல்





கடல் பிராணிகளின் பெயர்களைக் கண்டுபிடியுங்கள்!

விடைகள்:

பறப்பன - 2. பறக்கும் மீன்கள்
வேகமாக நீந்துவன - 6. மீன்கள்
மெதுவாக நீந்துவன - 3. ஸ்க்விட். 4. ஜெல்லி மீன். 5. ஆக்டோபஸ்
நடப்பன - 7. இறால்
ஊர்வன - 1. நண்டு. 10. கடல் நத்தை
தண்ணீரால் அசைவன - 8. நட்சத்திரமீன். 9. கடல் ஊமத்தை. 11. சோழி மீன். 12. இரட்டை ஓட்டுச்சிப்பி

லிக் கொடுப்பதைக் கூர்ந்து கவனிக்கலானான். குரு சொல்லிக் கொடுப்பது நன்றாகவே காதில் விழுந்தது. மனுவுக்குக் கற்பூர புத்தி. மனதில் பதிய வைத்துக் கொண்டான். பாட்டு வகுப்பு முடியும்போது யார் கண்ணிலும் படாமல் அறையை விட்டு வெளியேறினான். மனதிற்குச் சந்தோஷமாக இருந்தது. இவ்வாறு பலமாதங்கள் தொடர்ந்து செய்து வந்தான்.

அன்று இசைப் பயிற்சி துவங்கும் போது ஆனந்தன் என்ற மாணவன், "ஐயா! சென்ற மாதம் பட்டத்திற்கு வந்த புதிய இளவரசர் விக்ரம் இசையில் மிகவும் நாட்டம் கொண்டவர் என்று கேள்விப்பட்டோம். அடுத்த மாதம் அவருக்குப் பிறந்த நாள் வருகிறது. அந்தச் சமயம் பாட்டுப் போட்டி வைக்கிறாராம். போட்டியில் முதலாவதாக வெற்றி பெறும் மாணவனுக்கு ஐந்நூறு பொற்காசுகள் வழங்கப் போகிறாராம். என் தந்தை சொன்னார். நானும் கலந்து கொள்ளட்டுமா?" என்று கேட்டான்.

"பத்துப் பேருமே கலந்து கொள்ளுங்கள். கட்டாயம் யாருக்காவது பரிசு கிடைக்கும். உங்கள் பத்துப் பேரில் யாருக்குக் கிடைத்தாலும் மகிழ்ச்சியே. என்னுடைய மாணவன் பரிசு பெற வேண்டும். இதுதான் என் ஆசை" என்றார்.

மனுவின் காதில் அவர்கள் பேசியது அனைத்தும் விழுந்தன. அருந்ததி அவனைப் பார்த்து, "மனு! உன்னால் முடியும். நீ எனக்காகச் சேர்ந்து கொள். வீட்டில் கடுமையாக உழை. நிச்சயம் நீ வெற்றி பெறுவாய்" என்றார்.

அருந்ததியின் பேச்சை மீற அவன் விரும்பவில்லை. பாடல்களை வீட்டில் பல முறை பாடிப் பார்த்தான். அருந்ததி அவனை உற்சாகப்படுத்தி வந்தார்.

அன்று இளவரசரின் பிறந்த நாள். அலங்கரிக்கப்பட்ட அந்த மண்டபத்தில் பாட்டுப் போட்டி நடைபெற ஆரம்பித்தது. ஆடம்பரமான விலையுயர்ந்த உடைகளோடும் நகைகளோடும் அரங்கில் அமர்ந்து ஒவ்வொரு மாணவராகப் பாடலாயினர்.

கடைசியாகத் தூய்மையான எளிய உடையில் மனு பாட அமர்ந்தான். பெரும்பாலோரின் பார்வையில் கிண்டலும் பரிகாசமும் அப்பட்டமாக வெளிப்பட்டன. 'இவனுக்கு என்ன தெரியும் இசைப் பற்றி?' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர். அவை அனைத்தையும் பொருட்படுத்தாது மனு மனதால் தன் குருவுக்கு வணக்கம் செலுத்தி விட்டுப் பாடலானான்.

காற்றில் மிதந்து வந்த அவன் இசை அனைவரின் காதுகளிலும் தேனாகப் பாய்ந்தது. உள்ளத்தைச் சிலிர்க்க வைத்தது. சக்ரவர்த்தியும் வந்திருந்தார். மனுவின் இசையில் அவரே அசந்து விட்டார். மனுவை அவருக்கு ஞாபகம் வரவில்லை. அவன் பாடி முடித்ததும் அரங்கத்தில் எழுப்பிய கர ஒலியே அவன்தான் முதல் பரிசுக்கு உரியவன் என்பதை உணர்த்தியது.

தன் வீட்டிற்கு வந்த சக்ரவர்த்திக்கு எதிலுமே மனம் செல்லவில்லை. தன்னிடம் பயின்ற, பயில்கின்ற மாணவன் யாருக்குமே பரிசு கிடைக்காதது அவருக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

அப்போது - மனு அவர் முன் வந்து நின்றான். ஐந்நூறு பொற்காசுகளை அவர் பாதத்தில் காணிக்கையாக வைத்து அவரையும்


அருந்ததியையும் வணங்கினான்.

"குருவே! இது என் குரு தட்சிணை. இது நாள் வரை நான் தங்களிடமிருந்து கற்றுக் கொண்டதற்கும், இனி கற்றுக் கொள்ளப் போவதற்கும் சமர்ப்பித்துள்ளேன்" என்று கூறினான். குருவிற்கு ஒன்றுமே புரிய வில்லை. அருந்ததி நடந்தது எல்லாவற்றையும் விளக்கினார்.

"திறமை என்ற விதையை ஊன்றி முளை வளரப் பாடுபடறீங்க... முளை வந்த பயிரைப் புறக்கணிச்சிட்டீங்க. உண்மையான ஆர்வத்தோடு கற்றுக் கொள்ளத் துடிக்கும் ஏழை மாணவனுக்குச் சொல்லிக் கொடுப்பதும் ஒரு புண்ணியமான விஷயம் தான். ஓர் ஆசானின் கடமையும் கூட" என்று மனைவி கூறியதைக் கேட்ட சக்ரவர்த்தியின் கண்கள் திறந்தன.

"மனு! எனக்கு இப்பத்தான் ஞாபகம் வருகிறது. அன்று உன் ஏழ்மைக் கோலத்தைப் பார்த்து உன்னை விரட்டியடித்தது. எப்படியோ என் மாணவன் பரிசு வாங்கியிருப்பது எனக்குப் பெருமையாக இருக்குது. இனி என் வீட்டிலேயே நீ இரு. இசையின் எல்லா நுணுக்கங்களையும் உனக்குச் சொல்லித் தரேன். எனக்குப் பிறகு என் இடத்தில் நீதான் இருந்து அனைவருக்கும் அற்புத இசையைக் கற்பிக்க வேண்டும். உண்மையான ஆர்வம், பொறுமை, விடாமுயற்சி, தன்னம்பிக்கை இவை அனைத்தும் இருந்தால் கட்டாயம் வெற்றி பெறலாம் என்று காண்பித்தவன் நீ" என்று பாராட்டிய குருநாதரை மகிழ்ச்சியோடும் பணிவோடும் வணங்கினான் மனு.

உங்கள் நூலகம்



மாடிக்கு வந்த காண்டா!, ரேவதி, ரூ.20/-, பக்.84, பழனியப்பா பிரதர்ஸ், 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

'மாடிக்கு வந்த காண்டா!' தலைப்பைப் பார்த்த உடனே இது நகைச்சுவை நாவல் என்பது புரிந்து விடுகிறது. பாலுவும் மங்களாவும் அண்ணன் தங்கை. எலியும் பூனையும் மாதிரி சண்டை போட்டுக் கொண்டு இருப்பார்கள். ஒரு நாள் பாலுவின் பக்கோடா வாசனையை நுகர்ந்தபடி காண்டாமிருகம் ஒன்று அவன் மாடி வீட்டுக்குள் நுழைகிறது. அந்தக் காண்டாமிருகம் வீட்டைப் படுத்தும் பாடு, அதை எப்படி மங்களா வெளியேற்றுகிறாள் என்பதும்தான் கதை. நாவலைப் படிக்க ஆரம்பித்தால் கதை முடியும் வரை சிரிப்புக்கும், சுவாரசியத்துக்கும் பஞ்சமில்லை. இந்நாவலை கோகுலத்தின் முன்னாள் கௌரவ ஆசிரியர் ரேவதி எழுதியிருக்கிறார். சேகரின் படங்கள் நாவலுக்குப் பலம் சேர்க்கின்றன.

ஆஸ்கர் 'அ' முதல்..., சந்திரன், ரூ.150/-, பக்-304, புது தமிழ் பதிப்புகள், 2/15, நேதாஜி நகர் முதல் தெரு, திருவொற்றியூர், சென்னை - 19.

மிகவும் உயர்ந்த விருதாகக் கருதப்படும் ஆஸ்கர் பற்றி முழுமையான தகவல்களைத் தருகிறது இந்நூல். ஆஸ்கர் அறிமுகம், தொடக்கம், பெயர் வந்த காரணம், எந்தெந்த துறைகளுக்கு ஆஸ்கர், ஆஸ்கர் வளர்ந்த கதை என 21 தலைப்புகளில் விரிவாகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன. இது தவிர ஆஸ்கர் விருது பட்டியலும் இடம் பெற்றுள்ளன. ஆஸ்கர் பற்றி தமிழில் வெளிவந்துள்ள இந்நூல் நல்ல ஒரு ரெஃபரன்ஸ் புத்தகம்.


திருக்குறள் தெளிவுரை, ஆர்.பொன்னம்மாள், ரூ.20/-, பக்-296, அன்னை புத்தகாலயம், 3, சிவஞானம் தெரு, (இரண்டாவது மாடி), தி.நகர், சென்னை - 17.

திருக்குறளுக்கு நிறையப் பேர் தெளிவுரை எழுதி புத்தகங்களாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. உங்களுக்கு நன்கு அறிமுகமான ஆர். பொன்னம்மாள் தெளிவுரை எழுதியிருக்கிறார். எளிய நடையில் எல்லோருக்கும் புரியும் விதத்தில் இந்நூல் அமைந்துள்ளது சிறப்பு.

GOKULAM

The magazine for children

February 2004 Rs.6/- only



A FLIGHT OF IMAGINATION

Sci-Fi Story



STAR RENDEZVOUS

Derek O'Brien answers



THE SNOWMAN

Cover story

SPOT IT RIGHT!

CONTEST EVERY MONTH

For subscriptions mail to :

GOKULAM,

47-NP, Jawaharlal Nehru Road,Ekkaduthangal, Chennai - 600 097

E-mail : subscription@kalkiweekly.com

வாகை சூட வயது தடையில்லை!

72 கி.மீ. ஓடிய ப்ரீத்தி!



வீடியோவில் அந்தக் காட்சி ஓடிக் கொண்டிருந்தது. ஆறு வயது சிறுமியின் கழுத்தில், தாங்காத அளவுக்கு மாலைகள். சுற்றிலும் உள்ளூர் வி.ஐ.பிகள். எல்லோரும் வாழ்த்து மழை பொழிகிறார்கள். அவர்கள் பேசுவது முழுவதும் அந்தச் சிறுமிக்குப் புரிகிறதா என்று கூட நமக்குத் தோன்று கிறது. ஆனால் சிறுமியோ, தனது கராத்தே மாஸ்டரின் கட்டளையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பது போல அவரையே அடிக்கடிப் பார்த்தாள். தொலைக்காட்சி மைக்குகளும் சிறுமியை ஆக்ரமித்தன.

''எதுக்காகம்மா ஓடற?''

''மழை நீர் சேகரிக்கணும்னு சொல்ல ஓடறேன்'' மழலை மொழியில் சிறுமி சொல்லும் போது மேஸேஜ் நெஞ்சில் சென்று பதிகிறது.

மாஸ்டர் கட்டளையிட, தொடங்கியது சிறுமியின் ஓட்டம். வாணியம்பாடி - வேலூர் 72 கி.மீ. வாணியம்பாடியில் காலை ஆறரை மணிக்குத் துவங்கிய சிறுமியின் ஓட்டம் இரவு ஏழரை மணிவாக்கில் வேலூர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் முடிந்தது. இடையில் சிறுமி அருந்தியது தண்ணீர் மட்டுமே! வழிநெடுக பள்ளிக் குழந்தைகளும், பொதுமக்களும் அணி வகுத்து நிற்க, ஒரு பொதுநல செய்திக்காக, ஓடும் இளங்குருத்தின் ஓட்டம் வயதானவர்களின் கண்களில் நீரை வரவழைக்கிறது. சில இடங்களில் பாண்டு வாத்திய





வரவேற்பு. சிறுமியின் பனியனில் 'மழைநீர் சேகரிப்போம். விண்ணின் மழைத்துளி; மண்ணின் உயிர்த்துளி' என்ற வாசகம். துவங்கிய போது என்ன வேகத்தில் துவங்கியதோ அதே வேகம்தான் முடியும் போதும். எங்கும் ஓய்வு கிடையாது. அயற்சி என்பதே சிறிதும் முகத்தில் தெரிய வில்லை.

ப்ரீத்தியின் வழிகாட்டியும், கராத்தே மாஸ்டருமான கண்ணன், "அந்த 72 கி.மீ. தூரம் ப்ரீத்தியுடன் நாங்கள் ஓடி முடித் ததும் அடுத்த நாள் எனக்குக் கால் வீங்கிக் கொண்டது. நடக்கவே முடியவில்லை. ஆனால் ப்ரீத்திக்கு ஒன்றும் ஆக வில்லை. அவள் மறுநாள் வழக்கம் போல பள்ளிக்குக் கிளம்பி விட்டாள்" என்றார். இந்த 72 கி.மீ. ஓட்டத் துக்கு ஆறு மாதம் முன்பு திருப்பத்தூரில் இருந்து வாணியம் பாடி வரை, 27 கி.மீ. தூரம் மதநல்லிணக் கம் மற்றும் உலக அமைதிக்காகவும் ஓடி அசத்தியிருக்கிறார் ப்ரீத்தி.



வாணியம்பாடி எஸ்.எஃப்.எஸ். பள்ளி யில் இரண்டாம் வகுப்புப் படிக்கும் ப்ரீத்திக் குச் சாதனை புரிய தூண்டுகோலாக இருப்பவர்கள் பள்ளி ஆசிரியர்கள் மட்டு மல்ல; அவளின் பெற்றோர் வெங்கட் ரமணனும், வஸந்தலட்சுமியும் கூடத்தான். "சின்ன வயதிலேயே சமூக நன்மை குறித்த விஷயங்களை அவள் மனதில் பதிய வைக்க வேண்டுமென்றுதான் இதுபோன்ற சாத னைகளுக்கு அவளை ஊக்கப்படுத்து கிறோம். அவளுக்குக் கிடைக்கும் வாழ்த்து களில் கராத்தே மாஸ்டருக்கும் பெரிய பங்கு உண்டு" என்றார் வெங்கட்ரமணன்.

"ஆறு வயதுதான் ஆகிறது. ஆனால் அதற்குள் ஏகப்பட்ட சாதனைகள். ஓட்டம் ஒரு பக்கம் இருக்க கராத்தே போட்டிகளில் பல பரிசுகள். ப்ளாக் பெல்ட், பற்றியெரியும் வைக்கோல்போரில் வெறும் காலுடன் நெருப்புக்குள் நடந்து சென்று சாதனை செய்திருக்கிறாள். கண்ணைக் கட்டிக் கொண்டு கையில் வாளு டன் எதிரே வைக்கப்பட்டிருக்கும் பூசணிக்காயை இரண்டு சரிபாதி யாக வெட்டுவாள். இப்படி பல சாதனைகள். உயி ருக்கு ஆபத்தான விஷ யங்களாக இருந்தாலும் "பரவாயில்லை மாஸ்டர்; அவளுக்குப் பயிற்சி கொடுங்கள் என்று சொல் வார்கள் பெற்றோர்கள்" என்கிறார் மாஸ்டர் கண் ணன்.

'மழைநீர் சேகரிப்பு பற்றியச் செய்தி மக் களைச் சென்றடைய மாணவ, மாணவியரின் பங்கு வேண்டும்' என்று முதல்வர் பேசியதுதான் ப்ரீத்தியின் பெற்றோரைத் தூண்டியது. ப்ரீத்திக்கு ஒரு மாத காலம் கடுமையான பயிற்சி கொடுக் கப்பட்டது. தினமும் இரவு ஏழு மணி முதல் பத்து மணி வரை கண்ணன் துணை வர தேசிய நெடுஞ்சாலையில், விளக்கில்லாத நிலையில், பயிற்சி நடக்கும்!

"அவளிடம் சலிப்பே கிடையாது; ப்ரீத்தி என்று குரல்கொடுத்தால் போதும் உடனே ரெடியாகி விடுவாள்" என்கிறார் கண்ணன்.

கராத்தே மட்டுமல்ல; ப்ரீத்தி பரதநாட்டி யம் மற்றும் கீபோர்டும் கற்றுக் கொள்கிறாள். படிப்பிலும் படுசுட்டி. வெங்கட்ரமணனின் மூத்த மகள், ஒன்பதாவது படிக்கும் பத்ம ஸ்ரீயும் பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர்.

ப்ரீத்தியின் எதிர்கால லட்சியம் "பி.டி. உஷா போல ஆகணும்". ஆனால் பி.டி. உஷாவைத் தொலைக்காட்சியிலோ அல்லது நேரிலோ, இதுவரை ப்ரீத்தி பார்த்ததில்லை. அந்தத் தங்க மங்கையைப் பற்றிச் சொல்லி ப்ரீத்தியை ஊக்கப் படுத்திக் கொண்டிருக்கிறார் கண்ணன். இதே ஊக்கமும், வேகமும், ஆர்வமும் தொடர்ந்தால் ப்ரீத்தி மூலம் இந்தியாவுக் குத் தங்கப் பதக்கங்கள் நிச்சயம்.

- ப்ரியன்


இயற்கையின் சீற்றம்!

செய்தி நேரம்



பூகம்பம்

ஈரான் நாட்டின் தென் கிழக்குப் பகுதியில் உள்ளது பாம் நகரம். இந் நகரில் பூகம்பம் ஏற்பட்டது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டது



இந்நகரம். இதில் எழுபதாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பூகம்பத்தால் வீடுகள் நொறுங்கி, இடிபாடுகளில் சிக்கி இறந்து விட்டனர். எஞ்சியுள்ளவர்கள் படுகாயமடைந்து, சிகிச்சை பெற்று வருகின்றனர். பிரிட்டன், ஜெர்மனி, ரஷ்யா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து மீட்புப் படையினர் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர். உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் நிவாரணப் பொருட்கள் ஈரானுக்கு அனுப்பப்பட்டன.

ரோவர்

செவ்வாய் கிரகத்தைப் பற்றி ஆராய்வதற்காகப் பல நாடுகள் விண்வெளி ஓடங்களையும், செயற்கைக் கோள்களையும் அனுப்பி வருகின்றன. கடந்த ஆண்டு அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் ரோவர் என்ற விண்வெளி ஓடத்தை அனுப்பியது. இந்த ஓடம் வெற்றிகரமாக செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியுள்ளது. புகைப்படங்களையும் எடுத்து அனுப்பியுள்ளது. இதன் மூலம் செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருக்கிறதா என்பதும் விரைவில் தெரிய வரும். செவ்வாய் கிரகத்துக்குப் பிரிட்டன் அனுப்பிய பீகிள் பற்றி இதுவரை எந்தத் தகவலும் இல்லை.

தேர்தல் பராக்...

நாடாளுமன்றத்துக்கான தேர்தல் விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்று மாநில சட்டசபைத் தேர்தல்களில் பெற்ற வெற்றியால் பி.ஜே.பி. தேர்தலுக்குத் தயாராகி விட்டதாகக் கூறியுள்ளது. காங்கிரஸ் உட்பட மற்ற கட்சிகளும் தேர்தலுக்குத் தயாராகி வருவதாகக் கூறியுள்ளன. இதற்குள் கூட்டணி குழப்பங்கள் ஆரம்பித்து விட்டன. தி.மு.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகள் பி.ஜே.பி. கூட்டணியிலிருந்து விலகி விட்டன.

கடுங்குளிர்

நம் நாட்டின் வட மாநிலங்களில் தொடர்ந்து கடுங்குளிர் நிலவி வந்தது. நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளனர். கடுமையான மழையும், பனிக்காற்றும் வீசியதால் ரயில்கள் செல்ல இயலவில்லை. போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டது.



தேயிலை
அமைப்பு : விஸ்வேஸ்
படம் : சேகர்
ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே சீனர்கள் தேநீர் பருக ஆரம்பித்து விட்டனர்.
தேயிலை விதைகளை முதலில் தனியாக மணபடுகைகளில் விதைப்பர். 5 இஞ்ச் உயரம் செடிகள் வளர்ந்த உடன் மலைப் பாங்கான இடங்களில் நடுவர்.
தேயிலைச் செடிகளுக்கு நான்கு வயதாகும் போது இலைகளைப் பறிக்க ஆரம்பிப்பர். பறித்த இலைகள் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப் படும்.
முதலில் இலைகளை நிழலில் காய வைப்பர். பிறகு இயந்திரத்துக்குள் செலுத்தி இலைகளில் உள்ள நீரை வெளியேற்றுவர்.
அந்தக் கலவையைக் குளிர வைத்து வண்ணம் சேர்ப்பர். அதன் பின் இந்தக் கலவை வெப்ப உலையில் இட்டு வெளியே வரும் போது கருமையான பிரௌன் வண்ணத்தில் காணப்படும்.
இறுதியாகத் தேயிலை தரம், அளவைப் பொறுத்து தனித்தனியாகப் பிரித்து பேக் செய்யப்படும்.
பேக் செய்யப்பட்ட தேயிலை பாக்கெட்கள் பெரிய மரப் பெட்டிகளில் வைத்து வெளி நாடுகளுக்கு அனுப்பப் படுகிறது.
தேயிலைத் தூள் வெளியே அனுப்புவதற்கு முன் தொழிற்சாலையில் சுவை வல்லுநர்களால் ருசி பார்க்கப்படும். திருப்தியாக இருக்கும் பட்சத்தில் சிறு பாக்கெட்களில் பேக் செய்யப்படும்.
கடைகளில் கிடைக்கும் தேயிலைத் தூளை வாங்கி நாம் வீடுகளில் தேநீர் தயாரித்து, குடிக்கிறோம்.

அறிவு புரட்சியை நோக்கி அலோஹா

ALOHA™
MENTAL ARITHMETIC



இந்த

அலோஹா

பிள்ளைகளில் உங்கள் பிள்ளைகளும்
ஒருவர் என்றால் அவர்கள்
எதிர்காலம் சிறப்பானதாக இருக்கும்
என்பதில் ஐயமில்லை.

11 ஆண்டுகளில், 9 நாடுகளில் 2500 மையங்களில் 25 லட்சம் பிள்ளைகளிடம்

நிரூபிக்கப்பட்ட உண்மை இது

அலோஹாவின்... சிறப்பான பயிற்சிகள் உங்கள் பிள்ளைகளின் கணித ஆற்றலை சிறப்பானதாக மாற்றுவது மட்டுமின்றி அவர்கள் மனதினை ஒருமுகப்படுத்தி மற்ற பாடங்களிலும் சிறந்த விளங்க செய்கிறது.

- 3 மாதத்திலேயே பலனை அறியலாம்
- வாரத்தில் 2 மணி நேர பயிற்சி

5 - 13 வயது குழந்தைகளின்
மூளையின் முழுதிறன் வளர்ச்சிக்கானது

இதோ ஒரு சான்று..

இந்த விடையை உடனே சொல்ல முடியுமா?

6288 + 24 - 13 x 17 = ?
123 + 456 + 13 - 48 + 534 = ?

ஆனால் உங்கள் குழந்தைகளை மனக்கணக்காகவே ஐந்தே விநாடியில் இதன் விடையை சொல்ல வைக்க முடியும்

இந்தியா முழுவதும் 138 கிளைகள்,
சென்னையில் மட்டும் 53 கிளைகள்



தனி உரிமை கிளை (Franchisee) ஆரம்பிக்க தொடர்பு கொள்ளவும்

ALOHA MENTAL ARITHMETIC INDIA
(A Division of KK ACADEMY (P) LTD)
32, 1st Main Road, R.A.Puram, Chennai - 600 028
Ph: 24613262, 24616268 Fax: 52108090
E-mail: Info@alohaindia.com Web: www.alohaindia.com

அபாகஸ் என்றாலே அலோஹா தான்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 " Registered as a Newspaper in Srilanka